விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 166 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 20 புதன்கிழமை (03.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# நெஞ்சைப் பதறவைக்கும் செம்மணி மனிதப் புதைகுழி



- ஒன்றன்மேல் ஒன்றாக என்புக்கூடுகள்.
- நேற்று மட்டும் 8 என்புக்கூடுகள் அடையாளம்.
- சிறுவர்களின் என்புக்கூடுகளும் மீட்பு.
- இதுவரை 270 என்புக்கூடுகள் கண்டறிவு.

16ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா மாநகரசபை; உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

வவுனியா மாநகரசபை மற்றும் அதன் மேயர் ஆகியோரின் செயற்பாட்டுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த தடையை உயர்நீதிமன்றம் நேற்று இரத்துச் செய்து இடைக்காலத்தடை விதித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்,

வவுனியா மாநகர சபையின் முதல்வர், பிரதி முதல்வரின் செயற்பாடுகளுக்கான தடை உத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்க 15ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் இறக்குமதி செலவுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் எரிபொருள் நுகர்வு மற்றும் எரிபொருள் இறக்குமதிச் செலவுகள் குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று (02) வெளிப்படுத்தினார்.

உலக சந்தையில் நிலவும் 16ஆம் பக்கம் பார்க்க

### — காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் வழக்கு —

# நிகழ்நிலையில் சாட்சியமளிக்க கோட்டாபயவுக்கு அனுமதி

### யாழ். நீதிமன்றம் நேற்று வழங்கியது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகிய இருவர் தொடர்பில் நிகழ்நிலையில் சாட்சியமளிக்க அப்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்‌ஷவிற்கு யாழ்.நீதிவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரத்தில் சிக்கி இளைஞன் உயிரிழப்பு

### வவுனியாவில் சோகம்



(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம் குறிசுட்டகுளம் பகுதியில் உழவு இயந்திரத்தில் சிக்குண்டு இளைஞன் 02ஆம் பக்கம் பார்க்க

## இந்திய உயர்ஸ்தானிகரால் யாழில் பல்வேறு நலத்திட்டம் முன்னெடுப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வைத்தார். 02ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் பட்டதாரிகளுக்கு பெரும் அநீதி

### பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி



(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் போட்டிப் பரீட்சையின்போது வேலையற்ற பட்டதாரிகளுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர விமர்சித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், குறித்த போட்டிப் பரீட்சை 02ஆம் பக்கம் பார்க்க

## இணையத்தளத்தில் தாயகப் பாடல்

### ஒருவர் கைது

(சாவகச்சேரி)

தாயக எழுச்சிப் பாடலை எடிட் செய்து தனது தளத்தில் பதிவிட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியில் வைத்து யாழ்ப் 15ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்களின் வெசாக் நிகழ்விற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினோம்

### குற்றச்சாட்டுக்களை பொதுமைப்படுத்தாதீர்கள் முகாமைத்துவப்பீட மாணவர்கள் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் வெசாக்கூடுகள் சேதமாக்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து ஒட்டுமொத்த தமிழ் மாணவர் சமூகத்தின் மீதும் பொறுப்பைச் சுமத்த முயற்சிப்பதை தாம் கண்டிப்பதாகவும் குறித்த சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ். 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தில் இந்தியாவின் உதவி மகத்தானது

## ஆளுநர் வேதநாயகன் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இந்திய அரசாங்கம் தொடர்ச்சியாக பல்வேறு மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன், மேலும் பல திட்டங்கள் தற்பொழுது பரிசீலனையில் உள்ளன. இதற்காக இந்தியாவுக்கு வடக்கு மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வளாகத்தில் இந்திய அரசாங்கத்தின் விசேட நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்காகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று (02) செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. நீர் சுத்திகரிப்பு நிலையத்தை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து விசேட நிகழ்வும் ஆளுநரின் உரையும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் நா.வேதநாயகன் மேலும் குறிப்பிடுகையில்,

"வரலாற்று ஆய்வாளர்களும், சுற்றுலாவிகளும் பெருமளவில் வருகைதரும் புகழ்பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேஸ்வரம் ஆலயம் இங்கு அமைந்துள்ளது. இந்தியாவிலிருந்து வந்த மாருதப்புரவீகவல்லி இளவரசி, இங்குள்ள புனித தீர்த்தத்தில் (கீரிமலை ஊற்று) நீராடி தன் குறை நீங்கி, மாவிட்டபுரம் ஆலயத்தை எழுப்பி வழிபாட்டை நிலைநிறுத்தினார் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இத்தகைய மிக நீண்ட பண்டைய வரலாற்றையும் புகழ்பெற்ற புனித தீர்த்தத்தையும் கொண்ட இந்த ஆலயத்துக்குக் கடந்த 2015ஆம் ஆண்டு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வருகை தந்திருந்தார்.

இந்திய அரசு வட மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் ஏனைய வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் தொடர்ந்து தனது ஆதரவை வழங்கி வருகின்றது. வடமாகாணத்தில் உள்ள மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட இந்திய வீட்டு வசதித் திட்டத்தை நாம் எப்போதும் நன்றியோடு நினைவுகூருவோம். இதன் மூலம் இன்று பல குடும்பங்கள் நல்ல உறுதியான வீடுகளில் பாதுகாப்பாக வாழ முடிகின்றன. நான் அந்தக் காலகட்டத்தில் முல்லைத் தீவில் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றியதால் இதனை நேரில் கண்டு நன்கு அறிவேன். இந்திய அரசின் இந்த மகத்தான பங்களிப்பை வடபகுதி மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

இதுமட்டுமன்றி, ரயில்வே மறுசீரமைப்புத் திட்டம் மற்றும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மன்னார் மருத்துவமனை மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் இந்தியாவின் பங்களிப்போடு நடந்துள்ளன. மேலும் சில மருத்துவமனைத் திட்டங்கள் தற்பொழுது பரிசீலனையில் உள்ளன.

கடல் அலைகளுக்கு மிக அருகில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேஸ்வரம் ஆலயத்தின் குடிநீர்த் தேவைக்கு உங்களது ஆதரவு மற்றும் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டுக்குரியது. இந்த வரலாற்றுப் பூமியின் மேம்பாட்டுக்காக உதவும் இந்தியாவுக்கு, வடமாகாண மக்கள் சார்பாக, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா அவர்களுக்கும், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்தார். (ந-7)

## இந்திய...

கீரிமலை நகுலேஸ்வரத்துக்கு விஜயம் செய்த சந்தோஸ் ஜா நகுலேஸ்வரப் பெருமானைத் தரிசித்ததுடன்

இந்தியாவின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட சுமார் 8 இலட்சம் பெறுமதியான குடிநீர்த் தாங்கியினைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத் திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய் முரளி, தூதரக அதிகாரிகள், ஆலய நிர்வாகத்தினர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து இந்தியத் தூதுவர் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையையும் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மாணவர்களுக்கான புலமைப்பரிசிலை நேற்று வழங்கி வைத்தார்.

பொருளாதார ரீதியாக நலிவடைந்த மாணவர்களுக்காக இந்தியாவால் வழங்கப்படும் நிதி உதவி திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களில் இரண்டாம் தொகுதியினருக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

2024ஆம் ஆண்டில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் பட்டப்படிப்பு மாணவர்கள் 100 பேர் தமது கற்கை நெறிக் காலம் வரை ஒவ்வொரு மாதமும் 7500 ரூபா வீதம் பெற்றுக்கொள்கின்றனர். அதன் அடிப்படையில் வருடாந்தம் 400 மாணவர்கள் இத்தொகையினைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் பதில் துணைவேந்தர் பிரதீபராஜா, பல்கலைக்கழகப் பதிவாளர் காண்டீபன், யாழ்.இந்திய துணைத் தூதர் சாய் முரளி உள்ளிட்ட இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு விஜயம் செய்த சந்தோஷ் ஜா அங்கு அமைக்கப்படள்ள டாக்டர் அப்துல் கலாமின் நினைவிடத்தில் அஞ்சலி செயலுத்தியதுடன் மாணவர்களது நலன் கருதி இந்திய அரசால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி நூல்களையும் கையளித்திருந்தார். (ந-7)

## உழவு...

ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் குறிசுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த கஜேந்திரன் குகப்பிரியன் (வயது-20) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் குறிசுட்டகுளத்தில் அமைந்துள்ள காளிகோயிலில் வேலை செய்வதற்காக உழவு இயந்திரத்தை இயக்கியவேளை எதிர்பாராதவிதமாக உழவு இயந்திரத்தின் கீழ் தவறி வீழ்ந்து குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார். (ந-7)

## ஆசிரியர்...

யில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வேலையில்லாத பட்டதாரிகள் உட்பட ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் பரீட்சையில் தோற்றினர்.

எனினும் இந்தத் தேர்வின் மூலம் ஆசிரியர் பணிக்கு இருபத்து மூவாயிரம் பேர் மட்டுமே நியமிக்கப்படவுள்ளனர்.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிப் பரீட்சைகளில் பங்கேற்ற அனைவருக்கும் ஒரே வினாத்தாள் வழங்கப்பட்ட நிலையில், இந்த முறை பரீட்சையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஒரு வினாத்தாளும் பட்டதாரிகளுக்கு மற்றொரு வினாத்தாளும் வழங்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட வினாத்தாளில் உள்ள சில கேள்விகள் பதிலளிப்பதற்கு மிகவும் கடினமாக இருந்தபோதிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாளில் எளிதில் தீர்க்கக் கூடிய பல கேள்விகள் இருந்ததாக தயாசிறி ஜயசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த காலத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நடத்திய போராட்டம், ஜனாதிபதி தலையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் நிறுத்தப்பட்டதால் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கில் இலகுவான முறையில் ஆசிரியர் போட்டிப் பரீட்சை வினாத்தாள் வழங்கப்பட்டதா? என்ற சந்தேகம் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அனைத்துப் பரீட்சார்த்திகளையும் சமமாக நடத்த வேண்டும் என்றாலும், ஒரே பரீட்சைக்கு இரண்டு வினாத்தாள்களை வழங்குவது வேலையில்லாத பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும் என்றார். (ந-7)

மணிவிழா
வாழ்த்துக்கள்



திரு.இராஜேந்திரம் யோகேந்திரன்
B.A, (Trained Hinduism)
BEd, SLTS I
Best Wishes

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/கரணவாய் மகா வித்தியாலயம் | - 1998.01.07 - 1999.03.01 |
| யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை | - 1999.03.02 - 2001.01.14 |
| யா/கப்பூது ஏகாம்பர வித்தியாலயம் | - 2001.01.15 - 2006.02.07 |
| யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் | - 2006.02.08 - 2014.01.19 |
| யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் | - 2014.01.20 - 2022.03.28 |
| யா/பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | - 2002.03.29 - 2026.06.03 |

எமது பாடசாலையில் பணியற்றி 2026.06.03 இன்றுடன் ஓய்வுபெறும் திரு.இ.யோகேந்திரன் ஆசிரியரை வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சிகரெட்டுக்களுடன் சீனர்கள் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட, இரண்டு கோடியே 84 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளி நாட்டு சிகரெட்டுகளுடன் 13 வெளி நாட்டு பயணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் 28 முதல் 45 வயதுக்கு இடைப்பட்ட சீன நாட்டு பிரஜைகள் என விமான நிலைய சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்கள் நேற்று அதிகாலை 1.10 மணியளவில் தாய்லாந்தின்பாங்கொக் நகரிலிருந்து தாய் ஏயர் ஏசியா மற்றும் பாடிக் ஏயர் ஆகிய விமான சேவைகளுக்குச் சொந்தமான விமானங்கள் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அதன்பின்னர், விமான நிலையத்தின் வருகை முனையத்தின் கிரீன் சேனல் வழியாக குறித்த சிகரெட் தொகையை கொண்டு செல்ல முயன்றபோதே இவர்கள் சுங்க அதிகாரிகளால் பிடிபட்டனர்.

சந்தேகநபர்கள் கொண்டு வந்த 22 பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீன தயாரிப்பு சிகரெட்டுகள் அடங்கிய 948 கார்டூன்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. இவற்றில் மொத்தம் ஒரு இலட்சத்து 89 ஆயிரத்து 600 சிகரெட்டுகள் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சீன பிரஜைகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள், இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (நி)

# இலங்கையின் பணவீக்கம் 7 வீதம் வரை உயரக்கூடும்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை




**(கொழும்பு) மத்திய கிழக்கில் தொடரும் மோதல் மற்றும் அதிகரித்து வரும் உலகளாவிய எரிபொருள் விலைகள் காரணமாக நாட்டின் பணவீக்க விகிதம் 7% ஆக அதிகரிக்கக் கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரித்துள்ளார்.**

சிங்கள செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளார்.

இது தொடர்பில் இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட மத்திய வங்கி ஆளுநர்,மத்திய கிழக்கு மோதல் ஆரம்பத்தில் குறுகிய காலத்தில் தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அதன் நீடித்த காலம் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருள் விலைகள் தொடர்ந்து உயர்ந்து வருவதால், பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது சுமார் 5.4% முதல் 5.5% வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ள பணவீக்கம், தற்போதைய போக்குகள் தொடர்ந்தால் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எரிபொருள் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதை நாங்கள் கவனித்து வருகிறோம், அதேநேரத்தில் நுகர்வோர் தேவையில் குறிப்பிடத்தக்க சரிவு எதுவும் ஏற்படவில்லை.

எனவே, இந்த நிலைமைகள் தொடர்ந்தால், பணவீக்கம் 5 சதவீதத்தைத் தாண்டி 7 சதவீதத்தைக் கூட எட்டும் அபாயம் உள்ளது.

பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மத்திய வங்கி அண்மையில் தனது பணவியல் கொள்கையைக் கடுமையாக்கியுள்ளது.

பணவீக்கம் மேலும் அதிகரிப்பதைத் தடுக்கவும், பொருளாதார ஸ்திரத் தன்மையைப் பேணவும், வரும் மாதங்களில் தேவையைக் குறைப்பது அவசியமாகும்.

இதற்கிடையில், சட்டபூர்வமாக ஈட்டப்பட்ட நிதிகளை இலங்கைக்கு முறைசார்ந்த வங்கி அமைப்பின் மூலம் அனுப்புவதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை.

அந்த வகையில், சட்டபூர்வமான வழிகளில் ஈட்டப்பட்ட எந்தவொரு பணமும், நாட்டின் பணமோசடி தடுப்பு விதிமுறைகளுக்கு இணங்கும் பட்சத்தில், இலங்கைக்கு சிரமமின்றி அனுப்பப்படலாம்.

இருப்பினும், சட்டவிரோதமான வழிகளில் பெறப்பட்ட நிதிகள் சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தடைகளை எதிர்கொள்ளும் என அவர் தெரிவித்தார். (நி)

## சட்ட நடவடிக்கை பயத்தால்தான் பசில் நாட்டை விட்டு ஓடினார்

### ஆனந்த விஜேபால பகிரங்கம்



(கொழும்பு)

அரச நிதியை மோசடி செய்ததற்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சத்தில் தான் பஷில் ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார். சர்வதேச மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாதாளக்குழுக்களுக்கும், போதைப்பொருள் ஒழிப்புக்கும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வெளிநாடுகளில் பதுங்கியுள்ள குற்றவாளிகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச பொலிஸின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் பலர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். வெகுவிரைவில் மேலும் பலர் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்கள்.

அதேபோல் வெளிநாடுகளில் பதுங்கியிருந்தவாறு இலங்கையில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அரச நிதியை மோசடி செய்ததற்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை எதிர் கொள்ள நேரிடும் என்ற அச்சத்தில் தான் பசில் ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இவருக்கு எதிராக மாத்தறை நீதிமன்றமும், கொழும்பு கோட்டை நீதி மன்றமும் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பசில் ராஜபக்ஷ அரச நிதியை மோசடி செய்யவில்லையாயின் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி தனது தரப்பு நியாயத்தை நிரூபிக்கலாம்.

இவர்கள் கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்து கொண்டு எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

பசில் ராஜபக்ஷ இன்னும் எவ்வளவு நாட்கள் வெளிநாட்டில் பதுங்கியிருப்பார் என்பதை நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சர்வதேச மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் வெகுவிரைவாக எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

## பல்கலை மாணவர்களுக்கான புதிய விடுதித் திட்டங்கள் ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அரச பல்கலைக் கழகங்களில் சுமார் 16,000 மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு 55 புதிய விடுதித் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், 13 பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் புதிய விடுதிகள் கட்டப்படவுள்ளன.

சப்ரகமுவ மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழகங்களில் தலா 7 விடுதித் திட்டங்கள் மூலம் 2,200 மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்படவுள்ளன.

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் 2,000 மாணவர்களுக்காக 6 வீடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

கிழக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகங்களில் முறையே 1,600 மற்றும் 1,800 மாணவர்களுக்கான வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இவற்றுடன் ஸ்ரீஜயவர்தனபுர, வவுனியா, வயம்ப, யாழ்ப்பாணம், மொரட்டுவ, ருஹூணு, கம்பஹா விக்ரமாராச்சி ஆகிய பல்கலைக் கழகங்களும் திருகோணமலை வளாகமும் புதிய விடுதி வசதிகளைப் பெறவுள்ள நிறுவனங்களுள் அடங்குகின்றன.

இவற்றில் பெரும்பாலான திட்டங்கள் தற்போது விலைமனுகோரல், மதிப்பீடு அல்லது கொள்முதல் கட்டங்களில் இருப்பதுடன், ருஹூணு பல்கலைக்கழகம் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் முதற்கட்ட கட்டுமானப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டுச் செய்திகள்

## 2027 ஐ.பி.எல் தொடக்க ஆட்டத்தில் டிம் டேவிட் விளையாடத் தடை!




2026 இந்தியன் பிரீமியர் லீக் இறுதிப்போட்டியின் போது நடுவர் நிதின் மேனன் மீது ஐஸ் பையை வீசியதற்காக ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் நட்சத்திர வீரர் டிம் டேவிட் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதன் காரணமாக அடுத் தாண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல் தொடரின் முதல் போட்டியில் விளை யாட அவருக்கு தடை விதிக்கப்பட்டுள் ளது. அகமதா பாத் தில் உள்ள நரேந்திர மோடி மைதானத் தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

போட்டியின் 10 ஆவது ஓவரில் விக்கெட்டை இழந்த விரக்தியில் இருந்த டிம் டேவிட், நடுவர் நிதின் மேனனை நோக்கி ஐஸ் பையை வீசினார். ஐ.பி.எல் நடத்தை விதி களின்படி இது லெவல் 1 குற்றமாக கருதப்பட்டு, அவருக்கு 50 சதவீதம் போட்டிக் கட்டணம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருக்கு 2 குறை மதிப்பு புள்ளிகள் வழுங்கப்பட்டுள் ளன. இந்த சீசனில் டிம் டேவிட் செய்த மூன்றாவது லெவல்-1 விதிமீறல் இதுவாகும்.

ஏற்கனவே லீக் கட்டத்தின் 20 ஆவது மற்றும் 54 ஆவது போட்டி களில் அவர் குறைமதிப்புப் புள்ளி களை பெற்றிருந்தார்.

இறுதிப்போட்டியில் கிடைத்த 2 புள்ளிகளுடன் சேர்த்து அவரது மொத்த குறைமதிப்பு புள்ளிகள் 5 ஆக உயர்ந்தன.


ஐ.பி.எல் ஒழுங்கு விதிகளின்படி 5 குறைமதிப்பு புள்ளிகளை எட்டும் வீரருக்கு தானாகவே ஒரு போட்டி தடை விதிக்கப்படும்.

அதன்படி டிம் டேவிட் அடுத்த ஐ.பி.எல் சீசனின் முதல் ஆட்டத்தில் விளையாட முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

2026 ஐ.பி.எல் இறுதிப்போட்டி யில் குஜராத் டைட்டன்ஸை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்ற மகிழ்ச்சியில் இருந்த பெங்களூரு ரசிகர்களுக்கு இது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அடுத்த சீசனில் டிம் டேவிட் ஆர்சிபி அணிக்காகவோ அல்லது வேறு ஏதேனும் அணிக்காகவோ விளையாடினாலும், அந்த அணி யின் முதல் போட்டியில் அவர் கள மிறங்க முடியாது என்பது குறிப்பிடத் தக்கது. (3)

## மெஸ்ஸியின் பிரம்மாண்ட சிலை கொல்கத்தாவிலிருந்து அகற்றம்



கொல்கத்தாவில் பாதுகாப்பு காரணங்களுக்காக 70 அடி உயரம் கொண்ட பிரபல கால் பந்து வீரர் மெஸ்ஸியின் பிரம் மாண்ட சிலை அகற்றப்பட்டது.

கொல்கத்தாவின் லேக் டவுன் பகுதியில் அமைந்துள்ள அர்ஜென் டினா கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸியின் பிரம் மாண்ட சிலை, கடந்த மே மாதம் 25ஆம் திகதி வீசிய பலத்த காற் றுக்கு ஆடியது. இது தொடர்பாக உள்ளூர்வாசிகள் பொலிஸில் புகார் அளித்தனர்.

அதன்பேரில், சிலை ஆய்வு செய்யப்பட்டது. அதில், சிலையின் கட்டமைப்பு உறுதித்தன்மை இல்லை, அது பாதுகாப்பற்றது என்று தெரிய வந்தது.

இதையடுத்து,சிலை தற்காலி கமாகக் கயிறுகளால் கட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டது.

இந்த நிலையில், பாதுகாப்பு காரணங்களுக்காக மெஸ்ஸியின் சிலையை அகற்றி, வேறு இடத் திற்கு கொண்டு செல்லும் பணி நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்டது.

இராட்சத கிரேனின் உதவியு டன் அந்த சிலை பத்திரமாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட் டது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொல்கத்தா வந்திருந்த மெஸ்ஸி, இச்சிலையைத் திறந்து வைத்தது குறிப்பிடத்தக்கது. (3)

## லங்கா பிரீமியர் லீக் தொடரை புறக்கணித்தார் பெத்தும் நிஸ்ஸங்க




இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பெத்தும் நிஸ் ஸங்க, எதிர்வரும் 2026ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் தொடரிலிருந்து விலகத் தீர்மானித் துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணி யின் எதிர்வரும் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்தைத் தொடர் ந்து, நீண்டகாலமாக அவருக்கு இருந்துவரும் காயம் ஒன்றிலிருந்து முழுமையாகக் குணமடைவதற் காகவே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

பெத்தும் நிஸ்ஸங்க, சர்வதேச போட்டிகள் மற்றும் இந்தியன் ப்ரீமியர் லீக் உள்ளிட்ட தொடர்களில் கடந்த ஒரு வருட காலமாகத் தொடர் ச்சியாக விளையாடி வருகிறார்.

இந்த ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் வீரர்கள் ஏலத்திற்குத் தகுதி பெற்றிருந்த போதிலும், நேரடி ஒப்பந்தங்கள் மூலம் அவர் எந்த வொரு அணியிலும் உள்வாங்கப்பட் டிருக்கவில்லை.

இந்தநிலையில், 28 வயதான இவர் இந்தத் தொடரில் பங்கேற்க மாட்டார் என்றும், இந்த இடை வெளிக் காலத்தைப் பயன்படுத்தி முறையான சிகிச்சை மற்றும் மறு வாழ்வுப் பயிற்சிகளை மேற்கொள்ள வுள்ளார் என்றும் அவரது முகா மைத்துவம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து பெத்தும் நிஸ் ஸங்கவின் முகாமையாளர் அசங்க விஜேவர்தன குறிப்பிடுகையில், "இலங்கை நாட்டுக்காக விளை யாடுவதே எங்களின் முதன்மை நோக்கமாகும். எனவே, அடுத்து வரவிருக்கும் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான முக்கியமான தொடர்களுக்கு முன் னர் அவர் முழுமையாகக் குண மடைவதை உறுதி செய்யவே இந்த இடைவெளியைப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம்" என்று தெரி வித்துள்ளார்.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை அணிக்கு இருக்கும் சர்வதேசப் போட்டிகளுக்கு பெத்தும் நிஸ்ஸங்க முழுத் தகுதியுடன் இருப்பதை உறுதி செய்வதே இந்த முடிவின் நோக்கமாகும்.

அனைத்து வடிவ கிரிக்கெட் போட்டிகளிலும் இலங்கை அணி யின் அசைக்க முடியாத துடுப்பாட்ட வீரராக விளங்கும் பெத்தும் நிஸ் ஸங்க, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட வெள்ளை நிற பந்து கிரிக்கெட்டில் நாட்டின் மிக முக்கிய மான வீரர்களில் ஒருவராகக் கருதப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சந்தை நிலவரப்படி எரிவாயு விலைத்திருத்தம்

## லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜூன் 5 ஆம் திகதி எரிவாயு விலை திருத்தம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

மாதாந்திர எரிவாயு விலை திருத்தம் தொடர்பான அறிக்கைகள் நிதி அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், இறுதி அறிக்கை நாளை மறுநாள் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் நிலவும் விலைகளுக்கு ஏற்ப இந்த முறை எரிவாயு விலையைத் திருத்த திட்டமிட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், கடந்த மாதம் லிட்ரோ எரிவாயு விலையைத் திருத்த வேண்டாம் என்று நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 10 ஹெலிகொப்டர்களை நன்கொடையாக வழங்கிய அமெரிக்கா

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கத்தால் இலங்கை விமானப் படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட பத்து TH-57 'சீ ரேஞ்சர்' பல்நோக்கு ஹெலிக்கொப்டர்கள் தற்போது கடல் வழியாக நாட்டை வந்தடைந்துள்ளன.

இந்த புதிய விமானத் தொகுதியானது, இலங்கை விமானப்படையின் நீண்ட கால செயற்பாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்து, அதன் முழு விமானப் பிரிவை வலுப்படுத்துவதற்கு ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

நாட்டை வந்தடைந்துள்ள ஹெலிக்கொப்டர்கள் தற்போது ரத்மலான விமானப்படைத் தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

தேவையான தொழில்நுட்ப சோதனைகளை முடித்த பின்னர், வரும் நாட்களில் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக அவை பயன்படுத்தப்பட உள்ளன. (நி)

# தனிநபருக்கான மாதாந்த செலவு அதிகரிப்பு

(கொழும்பு)

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தனிநபர் ஒருவருக்கு மாதத்திற்குத் தேவையான குறைந்தபட்ச செலவு 17,117 ரூபாவாக அதிகரித்துள்ளதாகத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்திற்காக அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ வறுமைக் கோட்டின்படி, மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் வறுமைக் கோட்டின் பெறுமதி 427 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

மார்ச் மாதத்தில் அதிகாரப்பூர்வ வறுமைக் கோட்டின் பெறுமதி 16,690 ரூபாவாகப் பதிவாகியிருந்தது.

இந்த அதிகாரப்பூர்வ வறுமைக் கோடு என்பது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தனிநபர் ஒருவருக்கு மாதத்திற்குத் தேவையான குறைந்தபட்ச செலவை மதிப்பிடுகிறது.

ஏப்ரல் மாதத்திற்கான அதிகாரப்பூர்வ வறுமைக் கோட்டின்படி, அதன் அதிகபட்ச பெறுமதி கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளதுடன், அது 18,461 ரூபாவாகும்.

வறுமைக் கோட்டின் குறைந்தபட்ச பெறுமதி மொனராகலை மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளதுடன், அது 16,367 ரூபாவாகும். (நி)

# ஐ.எம்.எப் இன் நிபந்தனைகளுக்கு முற்றாக அடிபணிந்துள்ள அரசாங்கம்

## ஜி.எல்.பீரிஸ் சாடல்

(கொழும்பு)


சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளுக்கு அரசாங்கம் முற்றாக அடிபணிந்துள்ளமையையே எரிபொருள் விலையேற்றத்துக்கான முக்கிய காரணம் என முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியானது வெறுமனே வழங்கப்படவில்லை என்றும் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களை உயர்த்துவது போன்ற கடுமையான நிபந்தனைகளுக்கு அரசாங்கத்தை இணங்கச் செய்தே இந்த நிதித் தவணை விடுவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் எரிபொருள் உள்ளிட்ட அனைத்து மக்கள் மானியங்களையும் முழுமையாக ஒழிப்பதற்கு அரசாங்கம் உடன்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் வாழ்க்கைச் செலவு மக்கள் மேலும் தாங்க முடியாத அளவிற்கு உயரும் என எச்சரிக்கின்றோம்.

உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடையும் போது, பாகிஸ்தான் போன்ற நாடுகள் அதன் இலாபத்தை மக்களுக்கு வழங்கி, எரிபொருள் விலையை 22 ரூபாயினால் குறைத்துள்ளன. ஆனால் எமது நாட்டில் நிலைமை முற்றிலும் தலை கீழாக



உள்ளது.

ஏனைய நாடுகளின் தலைவர்கள் தற்போதைய உலகளாவிய நெருக்கடிகளின் போது தங்களது நாட்டு மக்களுடன் வெளிப்படையான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, கூட்டுத் தீர்வுகளைக் காண்கின்றனர்.

ஜப்பான் பிரதமர், சிங்கப்பூர் அமைச்சர்கள் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இதற்காக எடுத்து வரும் நடைமுறைச் சாத்தியமான உத்திகளை நாம் உதாரணமாகக் கூறலாம்.

அவுஸ்திரேலியாவின் மூன்று மாநிலங்கள் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு இலவச பேருந்து மற்றும் தொடருந்து சேவைகளை வழங்கியுள்ள நிலையில், இலங்கை அரசாங்கம் மாத்திரம் மக்களை ஏமாற்றி, உண்மைகளை மறைக்கும் கொள்கையையே பின்பற்றி வருகின்றது என அவர் தெரிவித்தார். (நி)

# மாகாண ரீதியில் இடம்பெற்ற விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி கடந்த 09.05.2026 அன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் பிரிவு 2 இல் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் எஸ்.ஜட்ஷன் 1 ஆம் இடத்தையும் கிளி/முக்கொம்பன் மகாவித்தியாலய மாணவன் த.பவிசன் 2 ஆம் இடத்தையும் யா/இந்துக்கல்லூரி மாணவன் கே.கம்ஷன் 3 ஆம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (நி-3-8)

# அனலைதீவுக்கு புதிய பேருந்து




(அனலைதீவு)

அனலைதீவு மக்களின் உள்ளூர் போக்குவரத்து சேவைக்காக இலங்கை போக்குவரத்து சபை பேருந்து நேற்றைய தினம் கடற்படையினரின் உதவியுடன் கொண்டு செல்லப்பட்டு சேவையில் இணைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக புதிய பேருந்து இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)


## கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி

### பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

காலம் - 07.06.2026 ஞாயிற்றுக்கிழமை

நேரம் -பி.ப 3.30

இடம் - கல்லூரி மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

தலைமை உரை

செயலாளர் அறிக்கை

பொருளாளர் அறிக்கை

புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் ஏனைய விடயங்கள்

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-5768)

நிர்வாகம் பழைய மாணவர்கள் சங்கம் கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 26.05.2026 முதல் 13.06.2027 வரை



**நல்லதையே நினைக்கும் விருச்சிக இராசி வாசகர்களே!**

உங்கள் இராசிக்கு 8ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் குரு பகவான். 26.5.2026 அன்று 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திற்கு செல்கிறார். உச்சம் பெற்று சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதியப் போகிறது. எனவே, மிச்சம் வைக்கும் அளவிற்கு வருமானம் வந்து சேரும். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

## பார்க்கும் குருவால் பணவரவு

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு, 9ஆம் இடத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார். ஐந்தும் ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும் என்பது ஜோதிட விதி. அந்த அடிப்படையில் தொழில் வெற்றி நடைபோடும். தொட்டது துலங்கும். நினைத்ததை செய்து முடிப்பீர்கள், நாலாபுறமும் இருந்து நல்ல தகவல் வந்துசேரும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உற்றார் உறவினர்கள், உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

**வெற்றி தரும் குரு பார்வை**

சுபகிரகமான குரு பகவான், உங்கள் இராசிக்கு தன - பஞ்சமாதிபதி ஆவார். அவர் உச்சம் பெற்று உங்கள் இராசியைப் பார்ப்பதால் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றிகிட்டும். குருவின் பார்வை உங்கள் இராசியிலும், 3, 5 ஆகிய இடங்களிலும் பதிகிறது. ஜென்ம இராசியில் பதிவதால் உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். வரன்கள் வாசல்தேடி வரும். வரலாற்று பொன்னேட்டில் உங்கள் பெயரும் இடம்பெறும். ஆன்மிகப் பயணம் அதிகரிக்கும்.

குருவின் பார்வை 3ஆம் இடத்தில் பதிவதால் உடன்பிறப்புகளின் ஒற்றுமை அதிகரிக்கும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிப்பீர்கள். சொத்துப் பிரச்சினை சுமுகமாக முடியும். புதிய சொத்துக்களும் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பர். வழக்குகள் சாதகமாக முடியும். தெளிந்த சிந்தனையோடு செயற்பட்டு தொழில் வளர்ச்சி காண்பீர்கள். மதிப்பு, மரியாதை உயரும்.

5ஆம் இடத்தை குரு பகவான் பார்ப்பதால், மன உறுதியோடு செயற்பட்டு மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்வீர்கள். பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். பெற்ற பிள்ளைகளால் பெருமையும், உற்ற நண்பர்களால் ஒத்துழைப்பும் கிடைக்கும் நேரம் இது. வியாபாரம் வெற்றி நடைபோடும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. முன்னோர் கட்டி வைத்த ஆலயத் திருப்பணிகளை தொடர்ந்து செய்து புண்ணியம் சேர்ப்பீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து உள்ளத்தை மகிழ்விக்கும். அஞ்சல் வழி தகவல் ஆச்சரியம் தரும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும் நேரம் இது.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

26.5.2026 முதல் 10.6.2026 வரை புனர்பூச நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் போது, அதிஷ்ட வாய்ப்புகள், அதிகாரத்துவ யோகம் வாய்க்கும். இது ஒரு இனிய காலமாக அமையும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக நடைபெறும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர். செய் தொழில் சிறப்பாக அமையும். வாகன யோகத்தால் வளர்ச்சி காண்பீர்கள். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். முன்னேற்றப் பாதையில் இருந்த முட்டுக்கட்டை அகலும்.

11.6.2026 முதல் 10.8. 2026 வரை பூசம் நட்சத்திரக் காலில் சனி சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் போது, வெற்றி வாய்ப்புகள் வாசல் தேடி வந்து நிற்கும். உங்கள் இராசிக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சனி பகவான். அது வெற்றிகள் மற்றும் சுக ஸ்தானம் என்பதால் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. கட்டிய வீட்டை பழுது பார்ப்பீர்கள். கலைத்துறை, எழுத்துத் துறையைச் சேர்ந்தவர்கள் புகழ் பெறுவர். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாகும். புனித பயணம் அதிகரிக்கும்.

11.8.2026 முதல் 19.10.2026 வரை மற்றும் 13.2.2027 முதல் 12.6.2027 வரை ஆயில்யம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும்போது தட்டுப்பாடுகள் அகன்று, தனவரவு குவியும். உங்கள் இராசிக்கு அஷ்டம லாபாதிபதியானவர் புதன் என்பதால் தொட்ட காரியங்களில் தொண்ணூறு சதவீதம் வெற்றிபெறும். வெளிநாட்டில் இருந்து வரும் தகவல் ஆச்சரியப்பட வைக்கும். கடன் சுமை குறைந்து கவலைகள் மறையும். உடன் பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். இறை சிந்தனையோடு எதையும் செய்து சாதிப்பீர்கள், தொழிலில் இலாபம் அதிகரிக்கும். நீங்கள் துணிந்து எடுத்த முடிவுகளை கண்டு அனைவரும் ஆச்சரியப்படுவர். தர்ம காரியங்களில் சிந்தனையை செலுத்துவீர்கள்.




20.10.2026 முதல் 12.2.2027 வரை மகம் நட்சத்திரக் காலில் குரு பகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் போது. அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும். சிம்ம குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகிறது. இக் காலம் ஒரு ஏற்றம் தரும் காலமாகும். செல்வாக்கு மிக்கவர்களின் ஒத்துழைப்போடு குடும்பத்தில் நல்ல காரியங்களை நடத்துவீர்கள். வீடு, இடம் வாங்கும் வகையில் பொருளாதாரம் உயரும். கூட்டுத்தொழிலில் இருந்து தனித்து இயங்க முற்படுவீர்கள். தொழிலில் புதிய யுக்திகளைக் கையாண்டு வளர்ச்சி காண்பீர்கள். பெற்றோரின் ஆதரவு திருப்தி தரும். போட்டிக்கடை வைத்தோர் விலகுவர்.

**ராகு - கேது பெயர்ச்சிக் காலம்**

13.11.2026 அன்று ராகு - கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. மகர ராகுவும், கடக கேதுவும் ராஜயோகத்தை வழங்கப்போகிறார்கள். உங்கள் இராசிக்கு வெற்றிகள் ஸ்தானத்தில் ராகுவும், பாக்கிய ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். எனவே, வெற்றி வாய்ப்புகள் வீடுதேடி வரும். வீரத்தோடும் விவேகத்தோடும் செயற்படுவீர்கள். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

செவ்வாய்க்கிழமை தோறும் விரதம் இருந்து விநாயகர் கவசம் பாராயணம் செய்து யோகபலம் பெற்ற நாளில் கற்பக விநாயகரையும், சண்முகநாதப் பெருமானையும் வழிபட்டால் வளர்ச்சி கூடும். எதிர்காலம் நலமாக அமையும்.

**பெண்களுக்கான பலன்கள்**

9இல் சஞ்சரிக்கும் குருவால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு வரப்போகிறது. புகழ் கூடும். புனித பயணங்கள் அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் அன்பும், அரவணைப்பும் கூடும். தாய்வழி ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பர். பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். பணிபுரிவோருக்கு பதவி உயர்வு உண்டு.

**குருவின் வக்கிர காலம்**

கடகம் மற்றும் சிம்மம் ஆகிய இராசிகளில் குரு பகவான் வக்கிரம் பெறும் போது, கொடுக்கல் - வாங்கல்களில் அதிக கவனமாக செயற்பட வேண்டியது அவசியம். முன்கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது. எதிர்மறை சிந்தனைகளை தவிர்த்து, நேர்மறை சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். உத்தியோகம் மற்றும் தொழில் செய்பவர்கள், அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. முறையான இறைவழிபாடு முன்னேற்றம் தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media




அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# நயினாதீவின் நன்னீர் வளம்; களப்பயணம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவின் நன்னீர் வளம் பற்றிய முதற்கட்ட பார்வையிடலை நோக்கமாகக் கொண்ட மூன்று நாள் களப் பயணம் ஒன்றினை கடந்த 29, 30, 31 ஆம் திகதிகளில் WAS PAR திட்டத்தின் சார்பில் YWP - இளம் நீர்வாண்மையாளர் வடக்கு வட்டத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

திட்ட ஒருங்கிணைப்பாளரும், சூழலியல் பேராசிரியருமான நடராஜா சிறிஸ்கந்தராஜா தலைமையில் நீரியல் ஆய்வினைப் பயிலும் அரச பணியாளர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நீர்வள மாணவர்களும் இணைந்து முன்னெடுத்தனர். நயினாதீவில் தொடர்ந்தும் பல ஆண்டுகளாக உள்ள பாரம்பரிய கிணறுகள், குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகளின் அமைவிடம், பரம்பல், பயன் பாடு உள்ளிட்ட பல விடயங்கள் நேரடியாக பார்வையிடப்பட்டு தண்ணீரின் தரம், உப்புச் செறிவு, உவர்நீராதல் நிலைமை உள்ளிட்ட பல விடயங்கள் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து கண்டறிந்ததோடு அங்கு வாழ்ந்து வரும் மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்து கொண்டனர்.(8-33-60)



# சேக்கிழார் சுவாமிகள் குருபூசை



(சாவகச்சேரி)

தென்மராட்சி - வரணி தமிழ்ச் சங்கமும் - வரணிசிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்திய சேக்கிழார் சுவாமிகள் குருபூசை அண்மையில் வரணியில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் இடம் பெற்றது. (8-30)



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

# கலந்துரையாடல்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் கட்டாய விடுமுறை தீர்மானத்தை தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பில் வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் பருத்தித்துறை வர்த்தகர் சங்க தலைவர் இரா.மயூதரன் தலைமையில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை நகர சபை பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதன், பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல், செயலாளர் ச.பிரசாத், பருத்தித்துறை தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி கருணாரத்ன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8-60)

# யோகக்கலை கற்கைநெறி நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக் கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (3)

# பொன்.சிவகுமாரனின் 52ஆவது நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

விடுதலைப் போராட்டத்தின் முதல் வித்து பொன்.சிவகுமாரனின் 52 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் உத்தியோகபூர்வமாக அனுஷ்டிக்கப்பட வுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அறிவித்துள்ளது.

உரும்பிராய் சந்தியில் உள்ள சிவகுமாரனின் நினைவிடத்திலேயே ஈகைச்சுடரேற்றி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்கு முறைக்கு எதிராக தன்னை முழுமையாக அர்ப்பணித்து போராடிய நிலையில் 1974 ஆம் ஆண்டு யூலை 5 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்ட சமயத்தில் நஞ்சருந்தி தன்னுயிரை பொன். சிவகுமாரன் ஆகுதியாக்கினார்.

தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தலுக்கு எதிராக தமிழ் மாணவர் பேரவையில் தன்னை முழுமையாக இணைத்துப் போராடிய பொன். சிவகுமாரன் உலகத்தமிழாராட்சி மாநாட்டு படுகொலை உள்ளிட்ட தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட ஆயுதவழியிலான வன்முறைகளையும் அடக்கு முறைகளையும் எதிர்த்து இளைஞனாக தன்னுயிரை இனத்திற்காக தியாகம் செய்தார்.

இவ்வாறாக இனத்தின் அடையாளமாக தமிழ் மக்களுக்கு எதிரான ஆயுதவழியிலான அடக்கு முறைகளுக்கு எதிராக துணிந்து போராடிய பொன். சிவகுமாரனின் தியாகத்தினை நிலைநிறுத்தி வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஒவ்வொரு வருடமும் அனுஷ்டித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நினைவேந்தலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் அழைப்பு [illegible] (8)




கைதடி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கலை நிகழ்வானது அண்மையில் திருமதி. ர.கோமா தலைமையில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் பலரின் பங்களிப்பில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திருமதி.இ.மகுடந்தினியால் எழுதப்பட்டு தெய்.சதீஸ்பாபுவினால் இசையமைக்கப்பட்ட மாதர் சங்கக் கீதம் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## எரிபொருள் ஏற்றுமதிக்கு தடை விதித்தது ரஷ்யா



(மொஸ்கோ)

உக்ரைனின் தொடர்ச்சியான வான்வெளித் தாக்குதல்களால் தங்களின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில், வானூர்தி எரிபொருள் ஏற்றுமதிக்கு ரஷ்ய அரசு தற்காலிகத் தடை விதித்துள்ளது.

இந்தத் தடை உத்தரவு எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என ரஷ்ய அரசு அறிவித்துள்ளது.

ரஷ்யா தனது ஜெட் எரிபொருளை முக்கியமாக கசகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட மத்திய ஆசிய நாடுகளுக்கே ரயில் மூலம் ஏற்றுமதி செய்து வருகின்றது.

"உள்நாட்டு எரிபொருள் சந்தையில் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதே இந்த முடிவின் நோக்கமாகும்" என்று ரஷ்ய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா ஏற்கனவே பெற்றோல் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தியுள்ளது.

எனினும், டீசல் ஏற்றுமதிக்கு எதிராக இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேவேளை, அது குறித்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருவதாக Interfax செய்தி நிறுவனம் கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தது.

உக்ரைனின் வான்வளி தாக்குதல்களால் சுத்திகரிப்பு நிலையங்களின் உற்பத்தி குறைக்கப்பட்டதால், ரஷ்யாவின் டீசல் உற்பத்தி ஏப்ரல் மாதத்தில் 10 சதவீதம் சரிவடைந் ததைத் தொடர்ந்து, மே மாதத்திலும் மேலும் 10 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று "ரொய்ட்டர்ஸ்" தரவுகள் காட்டுகின்றன. (3)

## 16 வயதிற்குட்பட்டவர்கள் சமூக ஊடகங்கள் பயன்படுத்தத் தடை

### மலேசிய அரசாங்கம் அதிரடி




(கோலாலம்பூர்)

மில்லியன் கணக்கான சிறுவர்களின் இணையப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகக் கணக்குகளை வைத்திருப்பதைத் தடை செய்யும் புதிய சட்ட விதிமுறைகளை மலேசிய அரசாங்கம் திங்கட்கிழமை முதல் அமுல்படுத்தியுள்ளது.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டொக் மற்றும் யூடியூப் போன்ற 8 மில்லியனுக்கும் அதிகமான பயனர்களைக் கொண்ட சமூக ஊடகத் தளங்கள் அனைத்தும், பயனர்களின் வயதை உறுதிப்படுத்தும் நடைமுறையைக் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

இந்த விதிகளுக்கு இணங்கத் தவறும் சமூக ஊடக நிறுவனங்களுக்கு 10 மில்லியன் ரிங்கிட் (சுமார் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) வரை அபராதம் விதிக்கப்படும். (3)

# சமாதான பேச்சுவார் நிறுத்திடபது

## ஹார்முஸ் நீரிணையை மூடப்போ

(டெஹ்ரான்)------------

ஈரான் அரசாங்கம் அமெரிக்காவுடனான சமாதான பேச்சு வார்த்தைகளை இடைநிறுத்து வதாக அறிவித்துள்ளது.



லெபனானில் இஸ்ரேல் தொடர்ந்து மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அமெரிக்காவுடன் நடத்தி வந்த அனைத்து மறைமுகப் பேச்சுவார்த்தைகளையும் ஈரான் உடனடியாக நிறுத்தியுள்ளது.

அத்துடன், உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தில் முக்கியப் புள்ளியாக விளங்கும் "ஹார்முஸ் நீரிணையை முழுமையாக மூடப்போவதாகவும் ஈரான் அதிரடியாக அறிவித்துள்ளது. ஈரானின் புரட்சிகர இராணுவப் படைப் பிரிவிற்கு நெருக்கமான "தஸ்னிம்" செய்தி நிறுவனம் நேற்று இந்த விபரங்களை வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் தற்காலிகப் போர்நிறுத்தத்தை நீடிப்பதற் கும், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடு களும் இடைத் தரகர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி வந்தன.

இந்நிலையில் இந்த அதிரடி முடிவை ஈரான் எடுத்துள்ளது. போர்நிறுத்த உடன்படிக்கைக்கான முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக லெபனான் விவகாரம் இருந்தது. ஆனால், இஸ்ரேல் லெபனானில் தொடர்ந்து போர்க் குற்றங்களில் ஈடுபட்டு வருவதால், போர்நிறுத்த ஒப்பந்தம் அனைத்து முனைகளி

# இரவோடு இரவாக உக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதல்

- 9 பேர் உயிரிழப்பு
- 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

(கீவ்)

உக்ரைனில் பல இடங்களில் நள்ளிரவு ரஷ்யா நடத்திய தாக்குதல்களில் 9 பேர் உயிரிழந்ததாகவும் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் நாட்டில் கீவ் முதலான பல நகரங்களில் ரஷ்யா பாரிய தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது.

ரஷ்யா தனது தாக்குதல் நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தும் என அண்மையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி எச்சரிக்கை விடுத்திருந்த நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ர்த்தைகளை ஈரான்!

## போவதாக அறிவிப்பு



லும் மீறப்பட்டுள்ளதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி, "ஒரு முனையில் போர்நிறுத்தம் மீறப் பட்டால், அது அனைத்து முனை களிலும் மீறப்பட்டதாகவே அர்த்தம். அமெரிக்கா-ஈரான் போர்நிறுத்தம் என்பது லெபனான் உட்பட அனைத்து பகுதிகளையும் உள்ள டக் கியதே" என்று குறிப்பிட்டுள்ளார். இஸ்ரேலுக்கும் அதன் ஆத ரவு நாடுகளுக்கும் பாடம் புகட்டும் வகையில், ஈரான் மற்றும் அதன் ஆத ரவு ஆயுதக் குழுக்களின் கூட்ட மைப்பு சில நடவடிக்கை களை எடுக்கத் தீர்மா னித் துள்ளது. சர்வதேச எண் ணெய் போக்குவரத் தின் உயிர் நாடியாகக் கரு தப்ப டும் ஹோர்முஸ் நீரி ணையை முழுமையாக மூடவும் ஈரான் திட்டமிட்டுள்ளது. (3)

யில், நேற்று முன்தினம் நள்ளிரவு ஏவுகணைகள், ட்ரோன்கள் உள் ளிட்டவற்றைக் கொண்டு மிக மோசமான தாக்குதலை ரஷ்யா நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்படு கிறது.

அத்துடன் பல கட்டி டங்கள், மக்கள் குடியிருப்பு பகுதிகள் பலத்த சேதம டைந்திருப்பதாக அதி காரி கள் கூறுகின்ற னர். (3)




# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு 6 பேர் உடல் சிதறி உயிரிழப்பு

## கொலையாளியும் தற்கொலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அயோவா மாநிலத்தின் மஸ்கடின் நகரில் ஏற்பட்ட குடும்பத் தகராறு ஒன்றின் பின்னணியில், நபர் ஒருவர் வெவ்வேறு இடங்களில் நடத்திய கொடூரத் துப் பாக்கிச் சூட்டுச் சம்பவங் களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் படு கொலை செய்யப்பட்டுள்ள னர். இக்கொடூரங்களை அரங்கேற்றிய சந்தேக நபரான துப்பாக்கிதாரியும் பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.




மஸ்கடின் நகரின் குடியி ருப்புப் பகுதியொன்றில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட தாகக் கிடைத்த அவசரத் தகவலையடுத்து, திங்கட் கிழமை மதிய வேளையில் பொலிஸ் அதிகாரிகள் சம் பவ இடத்திற்கு விரைந் துள்ளனர்.

பொலிஸார் அந்த வீட்டிற் குள் சென்று சோதனை யிட்ட போது, அங்கு துப்பாக் கிக் குண்டுக் காயங்களுடன் நான்கு பேர் இரத்த வெள் ளத்தில் கிடந்துள்ளனர். சம்பவ இடத்திலேயே அவர் கள் நால்வரும் உயிரிழந்து விட்டதாக மருத்துவப் பணி யாளர்கள் உறுதிப்படுத்தி யுள்ளனர். இதனைத் தொடர்ந்து கொலையாளியைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் பெரியளவிலான தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள் ளனர். பொலிஸார் அவரை ஒரு இடத்தில் வளைத்துப் பிடித்து, அவருடன் பேச்சு வார்த்தை நடத்த முயற்சித்த போது, சந்தேக நபரான ரையன் வில்லிஸ் மக்ஃ ர்லண்ட் தப்பியோட வழி யின்றித் தனது துப்பாக்கி யால் தன்னைத்தானே சுட் டுத் தற்கொலை செய்து கொண்டார்.

அத்துடன் மஸ்கடின் நகரின் மற்றொரு குடியி ருப்பு வீடு மற்றும் உள்ளூர் வியாபார நிறுவனம் ஆகிய இடங்களைச் சோதனை யிட்ட போது, அங்கு மேலும் இரண்டு ஆண்கள் துப்பாக் கிக் குண்டுக் காயங்களு டன் சடலங்களாகக் கண்டெ டுக்கப்பட் டுள்ளனர். இந்த இரண்டு மரணங் களும் ரையன் வில்லிஸ் நடத்திய அதே கொலைவெறித் தாக்கு தலுடன் தொடர்புடையவை என்பதைப் பொலி ஸார் உறுதிப்படுத்தியுள் ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் கொலை யாளி உட்பட மொத்தம் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். முதற்கட்ட விசாரணைக ளின்படி, குடும்பத்திற்குள் ஏற்பட்ட கடுமையான தக ராறு காரணமாகவே இந்த வன்முறை வெடித்துள்ள தாக மஸ்கடின் நகர பொலிஸ் மா அதிபர் அந் தோனி கீஸ் தெரிவித் துள் ளார். அத்துடன், உயிரி ழந்த ஆறு பேரும் கொலை யாளியின் நெருங்கிய உற வினர்கள் என நம்பப்ப டுகிறது. (3)

# இந்தியாவுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு அனுமதியோம்!

## மியன்மார் ஜனாதிபதி மோடியிடம் உறுதி

(நைப்பிடாவ்)



நான்கு நாட்கள் அரசு முறைப் பயணமாக மியன் மாரின் ஜனாதிபதி, ஜென ரல் மின் ஆங் ஹ்லைங் இந்தியா சென்றுள்ள நிலையில் நேற்று முன் தினம் டில்லியில் பிரதமர் மோடியை சந்தித்து இரு நாட்டு உறவுகள், எல்லை பிரச்சினை குறித்து ஆலோ சனை நடத்தினர்.

மியன்மாரின் நிலப் பரப்பு, இந்தியாவின் பாது காப்பு நலன்களுக்கு எதி ராகவோ இந்தியாவிற்கு எதிரான தேச விரோத நட வடிக்கைகளுக்கோ ஒரு போதும் பயன்படுத்தப்பட அனுமதிக்கப்படாது என்று மியன்மார் ஜனாதிபதி மோடிக்கு உறுதி அளித் தார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக, மியன்மாரின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட் டுக்கு இந்தியா எப்போதும் முழு ஆதரவை வழங்கும் என்று பிரதமர் மோடி வாக் களித்திருந்தார். மியன்மார் சீனாவுடன் எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளதால் இந்த வாக்குறுதி இந்தியா வுக்கு முக்கியத்துவம் வாய் ந்த தாகப் பார்க்கப்படுகிறது.

மியன்மாரின் ஜனாதி பதியாகப் பொறுப்பேற்ற பிறகு, ஜெனரல் மின் ஆங் ஹ்லைங் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பய ணம் இதுவாகும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய கொடிச்சீலை கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ள நிலையில் ஆலய மகோற் சவ பிரதம குருக்களிடம் கொடிச்சீலை நேற்றையதினம் கையளிக்கப்பட்டு ள்ளது.

(8-33)

# அச்சுவேலி கைத்தொழில்பேட்டைக்கு இந்திய உயர்ஸ்தானிகர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயம் செய்துள்ள இலங் கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா அச்சுவேலியில் உள்ள கைத்தொழில் பேட்டைக்கு சென்றி ருந்தார்.

அதன் போது, கைத்தொழில் பேட் டையின் தொழிற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த விஜயத்தின் போது, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சி யூலர் ஜெனரல் சாய் முரளி,தூதரக அதிகாரிகளும் உடனிருந்த னர்.

(8-33)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக் கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று அன்றையதினம் மாலை கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

(8-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 650 | 700 | 700 | 650 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 | -- | 300 |
| பச்சைமிளகாய் | 500 | 300 | 300 | 600 | 350 | 500 |
| தக்காளி | 450 | 550 | 500 | 600 | 450 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 200 | 200 | 120 |
| கோவா | 400 | 300 | 300 | 300 | 250 | 330 |
| கரட் | 350 | 500 | 500 | 600 | 450 | 470 |
| பூசணி | 120 | 120 | 100 | 150 | 100 | 80 |
| புடோல் | 300 | 250 | 200 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 400 | 200 | 380 |
| பெரிய வெங்காயம் | 250 | 210 | 250 | 220 | 200 | -- |
| பாகற்காய் | 1800 | 1500 | 1000 | 1600 | 1000 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 300 | 400 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 400 | 350 | 300 | 400 | -- | 300 |
| பயற்றங்காய் | 600 | 400 | 300 | 350 | 450 | 250 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 500 | 400 | 450 |
| பீற்றூட் | 450 | 500 | 400 | 600 | 350 | 475 |
| கறிமிளகாய் | 600 | 600 | 350 | 700 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 500 | 700 | 600 | 1000 | 800 | 800 |
| போஞ்சி | 650 | 700 | 800 | 800 | 750 | 550 |
| கத்தரிதம்புள்ள | 500 | 500 | 400 | 600 | -- | -- |
| கீரை - 1 பிடி | 200 | 120 | 200 | 150 | -- | 140 |
| தேசிக்காய் | 600 | 400 | 400 | 500 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 80-120 | -- | 80 |
| இராசவள்ளி | 400 | 450 | 350 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 700 | 600 | 600 | 600 | -- | -- |
| முள்ளங்கி | -- | 250 | 200 | 400 | 250 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 | -- | 50 |
| வல்லாரை | 100 | 75 | 100 | 80 | -- | 45 |
| ஈரப்பலா | -- | -- | 150 | 250 | -- | 120 |

# இராசிபலன்

03.06.2026
வைகாசி 20, புதன்கிழமை
திருதியை முன்னிரவு 8.07 மணிவரை

பூராடம் முன்னிரவு 11.59 மணிவரை
சுப நேரம் -4.22-5.52 மணிவரை
இராகு காலம் -11.52-1.22 மணிவரை

சந்திராஷ்டமம்- ரோகிணி, மிருகசீரிடம்.

வளவன்

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**கடகம்** மறைமுக எதிர்ப்புகள் அகலும், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும்.

**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம்காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.

**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்,உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்,போசன சுகமுண்டு.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும், தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

ஆயிரம் உபதேசங்களை விட ஒரு அனுபவம் நல்லபாடம் கற்பிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02 XVII

புருசோத்தமன்

# இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்





இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும் என்ற தரிசனத்தில் தமிழகத்தில் ஆதீனங்களின் செல்வாக்குப் பற்றியும் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய பெரியாரின் திராவிட சிந்தனையும் பற்றிப் பார்க்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாக இருந்தது.

இங்கு தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் இந்துமதம் ஓரங்கட்டப்பட்டதன் சான்றுகளை முன்னிலைப்படுத்தியிருந்தோம்.

கூடவே சனாதன தர்மத்தை ஒழிப்போம் என உதயநிதி ஸ்ராலின் கூறியதன் விளைவாக, திராவிட முன்னேற்றக் கழகத்தை தமிழக மக்கள் ஆட்சிக் கட்டிலில் இருந்து இறக்கினர்.

இப்போது தமிழக வெற்றிக் கழகம் தமிழ கத்தை ஆளுகிறது.

முதலமைச்சர் விஜயின் ஆடைக் கலாசாரத்தையும் அவரின் தனிப்பட்ட குடும்ப விவகாரங்களையும் தமிழக மக்கள் எவ்வாறு கருதிக் கொள்வர் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எதுவாயினும் சட்டசபை சபாநாயகர் பிரபாகர் தனது கன்னியுரையில்; 5000 பைபிள்களை இலவசமாக வழங்கினேன் எனக் கூறியதற்குள் 5000 பைபிள்களை இலவசமாக வழங்கி, ஐயாயிரம் பேரை அல்லது ஐயாயிரம் குடும்பங்களை தமிழகத்தில் மத மாற்றம் செய்தேன் எனும் மறை முகச் செய்தி உண்டென்பதால், அது குறித்து தமிழக மக்களின் எதிர்வினை எப்படியாக இருக்கும் என்பதையும் மதிப்பீடு செய்வதற்கு இன்னும் கால அவகாசம் தேவை என்பதும் இங்கு குறித்துரைக்கப்பட வேண்டும்.

அதேநேரம் அன்னியராட்சிக் காலத்தில் இருந்து இன்று வரை இந்து சமயம் ஏமாந்தும் விட்டுக் கொடுத்தும் தன்னிலை இழந்தும் போவதுதான் தலைவிதியாயிற்று.

இத் தரிசனத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது, முகநூல் பதிவொன்றைப் பார்வையிட நேர்ந்தது.

அதில் தமிழகத்தின் முதலமைச்சராக அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் பதவியேற்ற போது, அவரின் முதலமைச்சர் மேசையில் விபூதி பூசிய- உருத்திராக்கம் அணிந்த திருவள்ளுவரின் படம் இருந்தது எனக் குறிப்பிட்டு, திருவள்ளுவர் பெருமான் திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் இழந்தது கலைஞர் கருணாநிதி முதலமைச்சராகிய போது தான் என அந்த முகநூலில் குறிப்பிட்டிருந்ததையும் கண்ணுற்றோம்.

ஆக, சைவ சமயம் மட்டுமே தனது அடையாளங்களை இழந்து தன் தமிழ்மொழியை முதன்மைப்படுத்துகிறது.

ஆயினும் சைவ சமயம் தன் அடையாளங்களை இழந்ததேயன்றி, தமிழ் மொழியை முதன்மைப்படுத்தியதா? என்றால் அதற்கான பதில் மௌனமாகவே இருக்கும்.

ஆம், சைவ அடையாளங்களைப் புறந்தள்ளி தமிழை முதன்மைப்படுத்த முற்பட்ட போதிலும் மதம் மாறிய தமிழர்களைத் தமிழ்ப் பண்பாட்டின் வாசல்படிக்குக் கூட அழைத்து வர முடியவில்லை.

இதற்குத் தக்க உதாரணம் இரண்டு. அதில் ஒன்று தமிழக முதலமைச்சரான ஜோசப் விஜய், தமிழ்ப் பண்பாட்டை அடியோடு நிராகரித்து ஆங்கிலக் கத்தோலிக்கப் பண்பாட்டை பின்பற்றுவதாய் ஆடை அணிந்து கொண்டார்.

இது தவிர, திருவள்ளுவரின் அங்கத்தில் திரிபுடகமாக இருந்த திருநீற்றுக் குறிகளை அழித்து - உருத்திராக்க மாலையைக் கழற்றி அவரை வெறுமையாக்கிய கலைஞர் கருணாநிதியால் தமிழ்ப் புத்தாண்டை தமிழர்கள் என்ற பேரால் கூட, கத்தோலிக்க மக்களையும் அனுட்டிக்க வைக்க முடியவில்லை.

அதாவது நாம் எல்லோரும் தமிழர்கள் என்றால், சித்திரைத்திங்கள் முதலாம் நாளில் பிறக்கின்ற தமிழ்ப் புத்தாண்டை, மதபேதமின்றி அனைத்துத் தமிழ் மக்களும் அனுஷ்டிக்க வேண்டும்.

ஆனால் தமிழ் சித்திரைப் புத்தாண்டு என்பது சைவத் தமிழர்களுக்கானதென்ற போது, சைவ சமயம் தவிர்ந்த ஏனைய மதங்கள் தங்களின் இனம்- தங்களின் மொழி என்பதை முதன்மைப்படுத்தாமல், தங்களின் மதம் என்பதை துலாம்பரப்படுத்தி நிற்பதை நாம் காண முடியும்.

இங்கு தான் கலைஞர் கருணாநிதி தனது வழமையான பாணியில் ஒரு திருகுதாளத்தை முன்வைக்கின்றார்.

ஆம், தமிழர்களின் புத்தாண்டு என்பது தைத்திங்கள் முதலாம் நாளே. சித்திரை மாதத்து முதலாம் திகதி தமிழர் புத்தாண்டன்று எனக் கூறி, தமிழர்களின் 60 ஆண்டுகள் என்ற காலச் சுற்றை கந்தறுக்க முற்பட்டார்.

ஆம், வானசாஸ்திரங்களின் அடிப்படையில் பன்னிரு இராசிகளில் முதல் இராசியாக இருக்கக் கூடிய மேட இராசியில் சூரிய பகவான் பிரவேசிக்கின்ற நாள் சித்திரை முதலாம் திகதியாக இருப்பதால், அதுவே தமிழர்களின் புத்தாண்டுப் பிறப்பாகக் கணிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தமிழர்களின் வானசாஸ்திர அறிவியலை குழிதோன்றிப் புதைக்கும் வகையில் கலைஞர் கருணாநிதி செயற்பட்டாலும் அது தமிழகத்தில்- தமிழ் மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

எது எவ்வாறாயினும் தமிழர்கள் மத்தியில் மத வேறுபாடுகள் இருந்தாலும் தமிழ்ப் பண்பாடு என்று வரும்போது, தமிழின் பெயரால் தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டைப் பின்பற்ற வேண்டும்.

அவ்வாறு பின்பற்றுதல் என்பது தமிழர் திருநாளாகிய தைப்பொங்கலை - தமிழர் புத்தாண்டாகிய சித்திரைப் புத்தாண்டை கத்தோலிக்கம் மற்றும் கிறிஸ்தவம் சார்ந்த தமிழ் மக்களும் கொண்டாடுவதாக இருக்கும்.

ஒட்டுமொத்தத்தில் இஃது தமிழ் இனத்தின் ஒற்றுமைக்கும் வலுச்சேர்க்கும்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மே.20: உலகமுய்ய அனுதினமுழைக்கும் தேனீக்களுக்கு உலக தினம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

திகதிகள் கடந்து சென்றாலும் உலக தேனீக்கள் தினத்தை ஒவ்வொரு நாளும் கொண்டாட வேண்டும். எமக்கான உலகத்தை இயற்கையாக உருவாக்கிக் கொடுத்தாலும் நாம் வாழ்வதற்கான அனைத்து வசதிகளையும் இப்பூமியிலுள்ள உயிரினங்கள் தந்துதவுகின்றன. இவற்றுள் முதன்மையானதாக தேனீக்களைக் குறிப்பிடுகின்றனர். 2026 ஆம் ஆண்டுக்கான உலக தேனீக்கள் தினத்தின் கருப்பொருளாக "மக்களுக்காகவும் இந்த கோளுக்காகவும் தேனீயுடன் இணைந்திருப்போம். இந்த இணைப்பினால் எம்மை நிலைபேறான நிலைக்கு இட்டுச் செல்லும்" ("Bee Together for People and the Planet – A partnership that sustains us all).


உலகளாவிய ரீதியில் உணவு உற்பத்தி மற்றும் பஞ்சம் பட்டினி போக்கும் ஆதாரமாக தேனீக்களே காணப்படுகின்றன. ஏறக்குறைய 60 சதவீதமான உலக உணவினை உற்பத்தி செய்யும் தாவரங்களுக்கு தேனீ என்னும் ஆதாரம் தேவை. அதனையுணர்ந்து நாமாகவே வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்கின்றோம். அயன் மகரந்த சேர்க்கையாளர்களில் முன்னிலை வகிக்கின்ற சமூக அந்தஸ்துள்ள உயிரினமாகத் தேனீக்களை வகைப்படுத்தியிருக்கின்றனர். ஏனைய பூச்சிகளிலிருந்து தேனீக்கள் வேறுபட்டிருக்கின்றன.

இவற்றின் வாழ்க்கை முறை, ஒவ்வொன்றும் கடைப்பிடிக்கும் "ஒரு வீடு" என்னும் கொள்கை, அனைத்தும் அயராது உழைக்கும் திறன், மனையிலுள்ள இராணியின் கட்டளைகளை நிறைவேற்றும் பாங்கு, இன்னும் பெண்மைக்கு தேன்குடியில் கொடுத்திருக்கும் முக்கியத்துவம் இவையனைத்துடன் அவற்றின் உற்பத்தியான தேன், மெழுகு, றோயல் ஜெல்லி, எனப் பலவற்றிற்கும் உலகமக்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

தேனீக்கள் பலவகை. அவற்றுள் ஏபிஸ் செறேனா இன்டிக்கா என்பது எமது பிரதேசத்தில் காணப்படும் தேன்கூடுகளில் வதைகட்டி வாழும் வல்லமையுள்ள பொதுவான தேனீக்களாகும். அதிகாலையிலெழுந்து உணவுதேடி, நீராகாரம் தேடிப் பல மைல்கள் பறந்து அவற்றைக் கண்டுபிடித்து மீண்டும் தன்குடிக்கு திரும்பிவந்து உணவு உள்ள திசை, தூரம் மற்றும் உணவின் அளவு என்பனவற்றைத் துல்லியமாக கணக்கிட்டு தன் குடியிலுள்ள ஏனைய உணவு சேகரிக்கும் பெண் வேலையாள் தேனீக்களுக்கு நடனம் மூலம் தெரியப்படுத்தி பின்னர் அனைத்தையும் கூட்டிச் சென்று உணவு சேகரிக்கும் திறன் போல் யாருளர்.

ஐந்தறிவு ஜீவன்களுக்கு இத்துணை வல்லமையா என நாமெல்லோரும் அங்கலாய்க்கும், ஆச்சரியப்படும் வகையில் தேனீக்கள் வாழ்கின்றன. எமக்கான உணவு தேனீக்களின் மகரந்தச் சேர்க்கை நடைபெறாது விடின் அருமை பெருமையாகக் கிடைக்கும் நிலை வந்திருக்கும். எந்த உயிரினமும் தன்னினத்தைப் பாதுகாத்துக் கொள்வதைப்போல் தேனீக்களும் அதனைக் கடைப்பிடித்து கொண்டிருக்கின்றன. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் நாம் எமது வாழ்வை சிறப்புற அமைத்துக் கொள்ள நல்ல நண்பர்களில் ஒருவரான தேனீக்களை வளர்த்து வருவாயையும் வசதியையும் பெருக்கிக் கொள்ளலாம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



தேனீக்களின் குடியில் ஒரு இராணித் தேனீ, நூறு ஆண் தேனீக்கள் மற்றும் இலட்சக்கணக்கில் பெண் வேலையாள் தேனீக்கள் காணப்படும். ஆண் தேனீக்கள் அங்குள்ள உணவை உண்டு சூரிய ஒளியில் உடல் காய்வதுடன் இராணியுடனான இனப்பெருக்கத்திற்கே பயன்படுகின்றன. தேன் குடியிலுள்ள ஆண் தேனீக்களால் அந்தக் குடியின் முகாமைத்துவத்திற்கு எந்தவித பங்களிப்பும் கிடைக்காது. அவ்வளவு சோம்பேறிகளாக இருக்கின்றமையும் இவற்றுக்கு கொடுக்கு இல்லாத காரணத்தால் ஆண் தேனீக்கள் எவரையும் குத்தமாட்டாதவை. தேனீக்களில் குத்தும் கொடுக்கு பெண் இனப்பெருக்கத் தொகுதியில் முட்டையிடும் அமைப்பின் திரிபாகக் காணப்படுவதனால் வேலையாள் தேனீக்களில் கொடுக்கு அமிலச்சுரப்பினையும் (acid gland) அமிலத்தை நடுநிலையாகக் (Dufers gland) கொண்டு காணப்படும். இதில் மெலிற்றின் (melittin) மற்றும் கவர்ச்சி சுரப்பும் காணப்படும்.

இவையனைத்தினதும் கலவையே தேனீக்களில் உள்ள கொடுக்கும் [illegible] திரவமுமாகும்.

தேனீக்களில் வேலையைப் பிரித்துக் கொடுக்கும் பொறிமுறை சிறப்பாகவே இயங்குகின்றது. இது இயற்கையின் படைப்பு என்றால் மிகையாகாது. தேன்குடியில் இராணித் தேனீயின் கட்டளைக் கிணங்கவே அனைத்து தேனீக்களும் இயங்குகின்றன. ஆனால் இராணித் தேனீக்கு உடல் நலக் குறைபாடு ஏற்படின் அல்லது வயது முதிர்ந்தால் அதனால் அனைத்து தேனீக்களையும் கட்டுக்கோப்பாக வைக்கும் சுரப்பான இராணித் திரவம் (Queen substance) நலிவுற்றால் அல்லது அதனது சுரப்பு குறைந்தால் அனைத்து வேலையாள் தேனீக்களும் இணைந்து இராணித் தேனீயைக் கொடுக்கினால் குத்தி தேன்குடியிலிருந்து வெளியேற்றி விடும். அதேவேளை புதிய இராணித்தேனீக்கான அறையை உருவாக்கி புதிய இராணித்தேனீயையும் குடியையும் பாதுகாத்துக் கொள்ளும். ஆதலினால் இந்த குடியிலுள்ள அனைத்து வேலைகளையும் அனைத்து உறுப்பினர்களும் குழுவாக இணைந்து செய்யும் கட்டளை சிறப்புற நடைபெறுகின்றது. வேலையாள் தேனீக்களில் தாதி தேனீ, பாதுகாவலர் தேனீ, உணவு கொடுக்கும் தேனீ, இளவயதினருக்கான அறைகளை உருவாக்கும் தேனீ, உணவு தேடித்திரியும் தேனீ, குளிர் காலங்களில் தமது மனைகளுக்கருகில் தமது இறகுகளை அசைத்து தேன்குடியை குறிப்பிட்ட வெப்ப நிலைக்கு வைத்திருக்கும்.

தேனீக்களின் உணவாக சேமிக்கப்பட்ட தேனின் தன்மை அளப்பரியது. எவ்வளவு வருடமானாலும் சுத்தமான தேன் பல்லாண்டுகளாக கெட்டுப்போகாது இருக்கும். ஆனால் கடைகளில் காணப்படும் தேனுக்கு காலாவதியாகும் திகதி அதனது லேபலில் காணப்படும்.

இது ஒரு வேளை கலப்பான தேனாக இருக்கலாம் அல்லது வர்த்தக சட்டதிட்டங்களுக்கமைவாக காலாவதி திகதி அறிவிக்[illegible] சுத்தமான தேன் என்றும் கெடாது.

அதில் அதிக மருத்துவக் குணமுண்டு. குறிப்பாக அனைத்து சித்த வைத்திய மற்றும் பாரம்பரிய மருத்துவங்களில் தேன் நன்மை தரும் பதார்த்தமாகவே கணிக்கப்படுகின்றன.

தேனீயின் சுறுசுறுப்பிற்கு மாற்றேது. தமக்கிடப்பட்ட கட்டளையை பக்குவமாக செய்துமுடிக்கும் திறன் அவற்றுக்கான சிறப்பியல்பு. தேனீக்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்த பூச்சிநாசினி பாவனையால் வெகுவாகக் குறைந்து செல்வதனை அவதானிக்கலாம். இதனால் எமக்கான உணவு உற்பத்தியும் மறைமுகமாக பாதிக்கப்படுகின்றது என்பதனை உணர்க.

இவற்றுக்கு மாற்றீடாக வீட்டுத் தோட்டங்களில் பூக்கும் தாவரங்களை நடுகை செய்து வைக்கலாம். பலவகையான தேன்சுரப்புக்களைக் கொண்ட அலங்காரத் தாவரங்கள் மற்றும் நாம் உணவுக்காக நடுகை செய்த தாவரங்களை காலத்துக் காலம் தொடர்ச்சியாகப் பயிரிட்டு தேனீக்களை கிரமமாக உங்களது வீட்டுத் தோட்டத்திற்கு வரவழைத்து உணவு பெற வைக்கலாம். நாம் தேனீக்களுக்கான உணவைப் பெற வழிவகை செய்தால் அவை எமக்கு சிறப்பான உணவை மாறாகத் தருகின்றது.

தேனீக்களின் எண்ணிக்கையை சமன்செய்ய தேனீக்களைப் போன்ற சிறிய இயந்திர தேனீக்கள் உருவாக்கப்பட்டு விட்டன. இவை காலையில் பூக்களை நோக்கி சென்று மகரந்த மணிகளை சேகரித்து ஏனைய தாவரங்களின் பூக்களை இனச் சேர்க்கைக்கு உட்பட உந்துதலாயிருக்கின்றன. இவ்வகையான ரோபோ தேனீக்கள் வருகை தொழிநுட்பம் சார்ந்து பலவகை நன்மைகளைத் தந்தாலும் இயற்கையுடன் மல்லுக்கட்டும் தொழினுட்பமாக மாறி விடும் அபாயம் உண்டு. இயற்கையுடன் வாழப்பழகுவதே என்றும் எமக்கு நன்மையைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை. – மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படுத்துங்கள்

அரசாங்கத்திற்கு எதிராகத் தமிழ் மக்கள் செயற்படுகிறார்கள் என்ற சந்தேக மனப்பாங்குடன் நுணுகி நுணுகி ஆராய்வதே அரச புலனாய்வுத் துறையின் பணியாக உள்ளது.

அதாவது தமிழ் மக்களை எதிரிகளாகவும் அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் அல்ல என்பது போலவுமே புலனாய்வுத்துறையின் செயற்பாடுகள் அமைகின்றன.

உண்மையில் தமிழ் மக்களை எதிரிகளாகப் பார்க்காமல், சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்தும் தமிழ்மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் குறித்தும் புலனாய்வுத்துறை ஆய்ந்தறிந்து அதனை அரசிடம் முன்வைக்குமாயின் –

தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காண்பதன் மூலம் எங்கள் நாடு இலங்கை என்ற மனப்பாங்கை தமிழ் மக்களிடம் ஏற்படுத்த முடியும் என்ற உண்மையை புலனாய்வுத் துறை அரச உயர் மட்டத்திற்குத் தெரியப்படுத்தியிருக்குமாயின், சமாதானம் என்பது அதிக தூரத்தில் இருந்திருக்காது.

என்ன செய்வது தமிழ் மக்கள் ஒன்று கூடினால் – நினைவேந்தல் செய்தால் – நிகழ்வுகள் ஏதையேனும் முன்னெடுத்தால் அவ்விடத்தில் பிரசன்னமாகி, தமிழ் மக்கள் நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் விரோதமாக நடந்து கொள்வது போன்ற அறிக்கைகளை தலைமைப் பீடங்களுக்கு அனுப்பி வைப்பதே அரச புலனாய்வாளர்களின் செய்கருமமாயிற்று.

உண்மை. தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியோ அன்றி தமிழ் மக்கள் வாழும் இடங்களில் இருக்கக்கூடிய அரச நிர்வாகத்தின் செயற்றிறனின்மை பற்றியோ அரச புலனாய்வுத் துறையினர் அறிக்கை சமர்ப்பித்ததான வரலாறு இந்த நாட்டில் ஏதுமில்லை எனலாம்.

ஆம், வவுனியா மாவட்டத்தின் அரச அதிபராக இருந்த, பெரும்பான்மை இனம் சார்ந்த ஒருவர் அங்கு அரச காணிகளைச் சுவீகாரம் செய்ததான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் இதன் உண்மைத் தன்மை பற்றி அரச புலனாய்வுத் துறை ஆய்வு எதுவும் செய்ததாக இல்லை.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரை அந்த மாவட்டத்தின் அரச அதிபராக தமிழர் ஒருவர் இருப்பதே பொருத்தமானது. அவ்வாறு இருப்பதன் மூலம் அந்த மாவட்டத்து மக்கள் தங்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறவும் அதற்குரிய தீர்வுகளை எட்டக் கூடிய தாகவும் இருக்கும்.

இதன் காரணமாக வவுனியா மாவட்டத்தின் அரச அதிபராக தமிழர் ஒருவரை நியமிக்குமாறு அந்த மாவட்ட மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். அவர்கள் முன்வைத்த கோரிக்கையை முன்னிலைப்படுத்தி அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்; வவுனியா மாவட்டத்திற்கு தமிழர் ஒருவரை அரச அதிபராக நியமிக்குமாறு அரசைக் கேட்டுள்ளார்.

கூடவே, இதுபோன்ற மக்கள் சார்ந்த விடயங்களை எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தெரியப்படுத்தி, நிலைமைகளை சீர்ப்படுத்த வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இது தொடர்பில், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பது அவர்களின் தார்மீகக் கடமையாகும்.

## மானிப்பாய் கிழக்கில் சமூக சக்தி திட்டம் நேற்று அங்குரார்ப்பணம்

(மானிப்பாய்)

சமூக சக்தி ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைத் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மானிப்பாய் கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலும் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மானிப்பாய் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த 10 பயனாளிகளுக்கு காளான் வளர்ப்புத் திட்டத்திற்கான சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

அத்தோடு காளான் வளர்ப்பின் முதலாவது மையத்துக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன், பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி உள்ளிட்டவர்கள்.கலந்துகொண்டனர். (ந-7)

## கார் - ஈருருளி விபத்து தாய், மகள் படுகாயம்

காருடன் மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் தாயும் மகளும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாவிக்கரை பூங்கா வீதிச் சந்தையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து சென்ற காருடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் மகளான முன்பள்ளி மாணவியின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மகளை முன்பள்ளிக்குக் கூட்டிச் சென்ற போதே விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கார் சாரதியின் அசமந்த போக்கினால் விபத்து இடம்பெற்றதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந- 7)

## அரசியலமைப்பு விதிகளை அப்பட்டமாக மீறிய அநுர சாடுகிறார் விஜேதாச ராஜபக்ச

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது சத்தியப்பிரமாண உறுதிமொழியை மீறி, திட்டமிட்ட முறையில் அரசியலமைப்பை அப்பட்டமாக மீறியுள்ளார் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் விஜேதாச ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதி நியமனங்களைப் புறக்கணிப்பதன் மூலம், ஜனாதிபதி தனது சத்தியப்பிரமாண உறுதிமொழியை மீறி, திட்டமிட்ட முறையில் அரசியலமைப்பை அப்பட்டமாக மீறியுள்ளார் என்று தெரிவித்துள்ளார். (ந-7)

## புதையல் தோண்டிய இளைஞர்கள் கைது

தெஹியத்தகண்டிய அருகே முவகம்மன பிரதேசத்தில் புதையல் தோண்டிய மூன்று இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் இளைஞர்கள் சிலர் சட்டவிரோதமாக புதையல் அகழ்வில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து புதையல் தோண்டப் பயன்படும் அகழ்வு உபகரணங்கள் உள்ளிட்ட நவீன கருவிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் அக்குரஸ்ஸ, போகஸ்வெவ மற்றும் தெஹியத்தகண்டியவைச் சேர்ந்தவர்கள் என்றும் முறையே 24, 27 மற்றும் 37 வயதுடையவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து தெஹியத்தகண்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## காணித் தகராறு அண்ணனை அடித்து கொலை செய்த தம்பி

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை மாவட்டம் வலஸ்முல்லைப் பிரதேசத்தில் நீண்டகாலமாக நிலவிய காணித் தகராறு காரணமாக அண்ணனை தம்பி அடித்துப் படுகொலை செய்துள்ள அதிர்ச்சிச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொடூர சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய குடும்பஸ்தரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மேற்படி இரு சகோதரர்களுக்கும் இடையே நீண்டகாலமாகக் காணித் தகராறு நிலவி வந்துள்ளது. நேற்று முன்தினம் மாலையும் இது தொடர்பாக இருவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டு, அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது ஆத்திரமடைந்த தம்பி, அண்ணன் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளார். இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த அண்ணன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 34 வயதுடைய தம்பியைப் பொலிஸார் உடனடியாகக் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7)

## மனைவி படுகொலை கணவன் அதிரடிக் கைது

கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டிய பிரதேசத்தில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக, கணவன் மனைவியைக் கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ள கொடூரச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான 37 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.


படுகொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையே நீண்டகாலமாகக் குடும்பத் தகராறு நிலவி வந்துள்ளது. நேற்று முன்தினமும் இருவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறியுள்ளதுடன் இதன்போது ஆத்திரமடைந்த கணவர் வீட்டிலிருந்த கத்தியை எடுத்து மனைவியை சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகநபரான கணவரைத் திவுலப்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "பொய்கள் கட்டுக்கதைகளிலிருந்து IWT உண்மையைப் பிரித்தறிதல்" என்பதற்கான மறுப்பு



(ஒரு இந்தியப் பார்வை - டான் இதழில் ஏப்ரல் 9, 2026 அன்று வெளியான, ஓய்வு பெற்ற பிரிகேடியர் டாக்டர் ராஷித் வாலி ஜன்ஜுவாவின் கடிதத்திற்கான பதில்)

ஓய்வுபெற்ற பிரிகேடியர் டாக்டர் ராஷித் வாலி ஜன்ஜுவாவின் கடிதம், அவர் இந்தியா மீது குற்றம் சாட்டும் அதே தேர்ந்தெடுக்கப்பட்ட மறதி நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. உண்மைகளை ஒருதலைப்பட்சமின்றி ஆராய்ந்தால், அவருடைய பல வாதங்கள் வரலாற்று ரீதியாக முழுமையற்றவை மற்றும் சட்ட ரீதியாகத் துல்லியமற்றவை என்பது தெரியவரும்.

1948 இல் மத்திய பாரிதோவாப் மற்றும் தேபால்பூர் கால்வாய்கள் மூடப்பட்டதை, இந்தியாவின் கொள்ளையடிக்கும் நோக்கத்திற்கான சான்றாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அவர் அதன் முக்கிய பின்னணியை விட்டுவிடுகிறார்: இந்தக் கால்வாய்கள், பிரிவினைக்குப் பிறகு முற்றிலும் இந்திய எல்லைக்குள் அமைந்திருந்த நீர் ஆதாரங்களிலிருந்து நீரைப் பெற்றன; மேலும், இந்தியாவின் பிரிவினை எனும் மிகவும் சிக்கலான செயல்முறையின் போது அந்த நீர் விநியோகம் தடை பட்டது. 1948, மே 4 ஆம் திகதியிட்ட இடை ஆட்சி ஒப்பந்தத்தின் மூலம் இந்தப் பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில், பாகிஸ்தானே அந்த நீர் ஆதாரங்கள் மீதான இந்தியாவின் இறையாண்மை உரிமைகளை ஏற்றுக்கொண்டதுடன், தொடர்ந்து நீரைப் பயன்படுத்துவதற்காக நாணய வருவாய்க் கட்டணங்களைச் செலுத்தவும் ஒப்புக்கொண்டது. இது ஒரு தீய நோக்கச் செயல் என்பதற்கு மாறாக, ஒவ்வொரு பிரச்சினையையும் சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்ற இந்தியாவின் நோக்கத்திற்கான சான்றாகும்.

சிந்து நதி நீர் ஒப்பந்தம் பாகிஸ்தானின் நீர் நலன்களுக்குச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளது என்று நூலாசிரியர் வலியுறுத்துகிறார், அதே சமயம் முரண்பாடாக, பாகிஸ்தானின் நீரை "தொடர்ந்து திருட முயற்சிப்பதாக" இந்தியாவைக் குற்றம் சாட்டுகிறார். உண்மை என்னவென்றால், கிட்டத்தட்ட ஒரு தசாப்த கால பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு கையெழுத்திடப்பட்ட 1960 ஆம் ஆண்டின் சிந்து நதி நீர் ஒப்பந்தம், கீழ்நிலை நீர் நிலைப் பகுதியின் கண்ணோட்டத்தில், உலகின் மிகவும் தாராளமான எல்லை கடந்த நீர் ஒப்பந்தங்களில் ஒன்றாகும்.

இந்தியா, மொத்த சிந்து நதி அமைப்பின் நீரில் சுமார் 80 சதவீதத்திற்கான தனது உரிமைகளை விட்டுக்கொடுத்தது மட்டுமல்லாமல், ஏற்கனவே தனக்குச் சொந்தமான நீரைப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் மாற்றுப் பணிகளை மேற்கொள்வதற்கான இழப்பீடாக சுமார் £62 மில்லியன் (தற்போதைய மதிப்பில் சுமார் 3227.5 பில்லியன்) தொகையையும் செலுத்தியது. நவீன நீர் ஒப்பந்த வரலாற்றில், மேல்நிலை நீர்நிலைப் பகுதி ஒன்றால் இத்தகைய சலுகை எதுவும் வழங்கப்படவில்லை.

மேற்கு நதிகளில் இந்தியாவுக்கு 3.6 MAF மொத்த நீர் தேக்கத்திற்கு மட்டுமே அனுமதி உண்டு என்றும், ஆற்று நீரோட்ட நீர்மின் திட்டங்கள் கீழ்நிலை நீரோட்ட முறையை மாற்ற க்கூடாது என்றும் ஜன்ஜுவா சரியாகக் குறிப்பிடுகிறார். இதுவே இந்தியாவின் நிலைப்பாடும் ஆகும். இந்த சர்ச்சை அடிப்படையில், "கீழ்நிலை நீரோட்ட முறையை மாற்றுதல்" என்பது குறித்த பாகிஸ்தானின் விளக்கத்தைச் சுற்றியே சுழல்கிறது. திட்டத்தின் அளவு அல்லது வடிவமைப்பைப் பொருட்படுத்தாமல், மேற்கு நதிகளில் இந்தியா கட்ட முற்படும் ஒவ்வொரு நீர்மின் திட்டத்திற்கும் எதிராக பாகிஸ்தான் இதை ஒரு ஆட்சேபணையாகப் பயன்படுத்தி வருகிறது. இந்த முறை பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது. எந்த வசதியும் இல்லாத யூரி II திட்டத்திற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் வடிவமைக்கப்பட்ட நீர்த்தேக்க அளவுக்கும் பாகிஸ்தானின் கணக்கிடப்பட்ட அளவுக்கும் இடையிலான வேறுபாடு தசமப் பின்னங்களில் மட்டுமே இருந்தபோதிலும், லோயர் கல்னாய் திட்டத்தி ற்கும் ஆட்சேபணைகள் எழுந்தன. இரண்டு நிகழ்வுகளிலும், ஆட்சேபணைக்கான உண்மை அடிப்படை, ஒரு உண்மையான அக்கறையாக இல்லாமல், ஒரு தொழில்நுட்ப சாக்குப்போக்காக இருக்கும் அளவிற்கு மிகக் குறைவாகவே இருந்தது.

ஒப்பந்தத்தின் விதிகளுக்கு முழுமையாக இணக்கமான, சட்டப்பூர்வமான ஆற்று நீர்மின் திட்டங்களான கிஷன்கங்கா மற்றும் ரட்லே நீர்மின் திட்டங்களுக்கு, பாகிஸ்தான் மேலும் ஆட்சேபனைகளை எழுப்பியுள்ளது. ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நடுநிலை நிபுணர் வழி முறையைத் தவிர்த்து, ஒரு நடுவர் நீதிமன்றத்தை நியமிக்குமாறு உலக வங்கியைக் கேட்டுக்கொள்வதன் மூலம் இது நிகழ்ந்துள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இந்தியா தெரிவிக்கும் ஆட்சேபனை, பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிக்கும் முயற்சி அல்ல; சர்வதேச நீர் ஒப்பந்தத்தின் (IWT) ஒன்பதாவது பிரிவின் கீழ் வெளிப்படையாகக் கோரப்பட்டுள்ளபடி, நடுவர் மன்றத்தை நாடும் முன், ஒப்பந்தத்தால் கட்டளையிடப்பட்ட தகராறு தீர்வு வழிமுறைகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு கொள்கை ரீதியான நிலைப்பாடாகும். படிப்படியான தகராறு தீர்வு படிநிலையைத் தவிர்த்து, பாகிஸ்தான் ஒருதலைப்பட்சமாக நடுவர் நீதிமன்றத்தை நாடுவதே ஒப்பந்தக் கடமைகளை மீறுவதாகும்.

ஒப்பந்தத்தின் வழிமுறைகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து இடையூறு விளைவிப்பதையும், ஒரு தலைப்பட்சமாக வெளி நடுவர் மன்றத்தை நாடுவதையும் ஒப்பந்தத்தின் நோக்கத்திற்கு முரணான நடத்தை எனக் குறிப்பிட்டு, இந்தியா 2023 ஜனவரியில், பிரிவு XII(3) இன் கீழ் சர்வதேச நீர் ஒப்பந்தத் தில் (IWT) திருத்தம் கோரி ஒரு அறிவிப்பை வெளியிட்டது. இது ஒருதலைப்பட்சமான ரத்து அல்ல, மாறாக சட்டப்பூர்வமாக கிடைக்கக்கூடிய ஒரு தீர்வாகும். தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மேற்கு நதிகள் மீதான இந்தியாவின் சொந்த வளர்ச்சித் தேவைகள், மற்றும் தகராறு தீர்வு விதிகளை பாகிஸ்தான் நேர்மையற்ற முறையில் பயன்படுத்துதல் உள்ளிட்ட அறுபது ஆண்டுகால மாறிய சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த ஒப்பந்தத்தை மறுபேச்சுவார்த்தை செய்ய வேண்டியுள்ளது. இந்தியா ஒரு ஒப்பந்த உரிமையைப் பயன்படுத்துகிறது, அதை மீறவில்லை.

எகிப்து-எத்தியோப்பியா மற்றும் சிரியா-ஈராக் ஒப்பீடுகள், ஜன்ஜுவாவின் வாதத்தை ஆதரிப்பதற்குப் பதிலாக உண்மையில் வலுவிழக்கச் செய்கின்றன. அந்தச் சந்தர்ப்பங்க ளில், சட்டப்பூர்வமாகப் பிணைக்கும் இருதரப்பு ஒப்பந்தங்கள் எதுவுமே இல்லை. இதன் காரணமாகவே, ஆற்றின் கீழ்மட்டத்தில் உள்ள நாடுகள் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளன. இதற்கு மாறாக, பாகிஸ்தான் இந்தியாவுடன் ஒரு விரிவான, சட்டப்பூர்வமாகப் பிணைக்கும் ஒப்பந்தத்தைக் கொண்டிருந்தது. ஆனால் அது, வளர்ச்சிக்காக அல்லாமல், ஒரு அரசியல் கருவியாகவே பெருமளவில் பயன்படுத்தப்பட்டது.

இத்தகைய சிக்கலான ஒரு உடன்படிக்கை குறித்த பொறுப்பான விமர்சனமானது, வேட்டையாடுபவர்கள் மற்றும் இரைகள் என்ற கதையாடலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். இந்தியாவின் தாராள மனப்பான்மையின் காரணமாகவே சிந்து நதி நீர் உடன்படிக்கை அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது. இந்தியாவின் கவலைகள், மாறிவரும் சூழ்நிலைகளை நியாயமாக அங்கீகரிப்பதையும், இந்தியா தனது சொந்த நதி நீரை சட்டப்பூர்வ மாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் ஒரு அரசியல் கருவியாக இந்த உடன்படிக்கையை காலவரையின்றிப் பயன்படுத்த முடியாது என்பதையும் பிரதிபலிக்கின்றன. பாகிஸ்தானின் இத்தகைய தூண்டிவிடும் சொல்லாடல்கள் அதன் நோக்கத்தைத் தெளிவாக வெளிப்படுத்துவதோடு, இந்தியாவின் நிலைப்பாட்டையும் நியாயப்படுத்துகின்றன.



(C-5769)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இணையத்தளத்தில்...

பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,104)

## நிகழ்நிலையில்...

கடந்த 2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் நடத்த திட்டமிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

அதனை அடுத்து லலித் மற்றும் குகன் ஆகியோரின் உறவினர்களால் ஆட்கொணர்வு மனு கடந்த 2012 ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. அந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைகளின் போது கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் இணைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது கோட்டாபய ராஜபக்ஷ மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு மன்று உத்தரவிட்டது. எனினும் பாதுகாப்பு காரணங்களால் தன்னால் யாழ்ப்பாணம் வர முடியாது எனத் தொடர்ச்சியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்து வந்தார்.

இந்நிலையில் வழக்கு விசாரணைகளின் போது, கோட்டாபய ராஜபக்ஷ நிகழ்நிலை (online) ஊடாக தோன்றி மன்றில் சாட்சியம் அளிக்க தனது சட்டத்தரணிகள் ஊடாக மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதனை அடுத்த, கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தருவதில் உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் சத்திய கடதாசியை சமர்ப்பிக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, கோட்டாபய ராஜபக்ஷ நிகழ்நிலை ஊடாக மன்றில் தோன்றி தனது சாட்சியங்களை பதிவு செய்ய மன்று அனுமதித்துள்ளது. (ந-7)

## வவுனியா...

ப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மாநகர சபையின் முதல்வர் சார்பில் நானும் பிரதி முதல்வர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் உயர் நீதிமன்றத்தில் குறித்த தடைக்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்திருந்தோம். உயர் நீதிமன்றத்தில் குறித்த வழக்குக்கான தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் முதல்வர் தலைமையிலான மாநகர சபை இயங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை நீக்கி இடைக்காலத் தடை உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதல்வர் தலைமையில் சபை இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் பிரதி முதல்வர் தொடர்பான இடைக்காலத் தடை தொடர்ந்து நீடிக்கப்பட்டு வருகின்றது.

எனினும் பிரதி முதல்வர் இராஜினாமா கடிதத்தை வழங்கினால் அதனை ஏற்றுக் கொள்வதற்கான அனுமதியும் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ந-7,250)

## மாணவர்களின்...

பல்கலைக்கழக முகாமைத்துவ பீட வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த வெசாக் கூடு கடந்த ஞாயிற்றுக்கிழமை சிலரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் முகாமைத்துவ மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலையே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது பீடத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர்களால் வெசாக் விளக்குகள் காட்சிப்படுத்தப்பட்ட இந்நிகழ்ச்சி, ஒன்றியத்தின் ஒப்புதல் மற்றும் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியை எளிதாக்குவதிலும் அது வெற்றிகரமாக நடைபெறுவதை உறுதி செய்வதிலும் தமிழ் மாணவர்கள் தங்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் முனைப்புடன் வழங்கினர்.

மாணவர்கள் இந்த முக்கியமான சமயம் மற்றும் பண்பாட்டு விழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்க, சாத்தியமான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டன.

துரதிர்ஷ்டவசமாக ஒரு சில நபர்களால் வெசாக் கூடு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாசவேலையை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். மேலும் இதற்கு நேரடியாகப் பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனக் கோருகிறோம்.

அதே நேரத்தில் சில தனிநபர்கள் இந்தச் சம்பவத்தைப் பொதுமைப்படுத்தி, ஒட்டுமொத்த தமிழ் மாணவர் சமூகத்தின் மீதும் பொறுப்பைச் சுமத்த முயற்சிப்பதை நாங்கள் கண்டிப்பதுடன் எங்களது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறோம். இத்தகைய குற்றச்சாட்டுகள் நியாயமற்றவை. தவறாக வழிநடத்துபவை.

குற்றவாளிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதே சமயம், இந்தத் தனிப்பட்ட சம்பவத்தை [illegible] சிக்கலாக மாற்றும் எந்தவொரு முயற்சியையும் நாங்கள் நிராகரிக்கிறோம்.

ஒரு சில தனிநபர்களின் செயல்களை சமூகங்களுக்கு இடையே பிளவுகளை உருவாக்கவோ அல்லது நமது பீட மாணவர்களிடையே நிலவும் ஒற்றுமையையும் பரஸ்பர மரியாதையையும் சீர்குலைக்கவோ பயன்படுத்தக் கூடாது.

அனைத்து மாணவர்களும் பொறுப்புடன் செயற்படுமாறும் தவறான தகவல்களைப் பரப்புவதைத் தவிர்க்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நியாயமான விசாரணை நடத்த அனுமதிக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

நமது பீட சமூகத்தை வலுப்படுத்தும் நல்லிணக்கம், மரியாதை மற்றும் சகவாழ்வு ஆகிய விழுமியங்களை நாம் தொடர்ந்து நிலைநிறுத்துவோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7,33)


மஹஜன சம்பத — NLB — திகதி 2026.06.02 — சீட்டிழுப்பு இலக்கம் 6206 — M 6 2 5 6 6 7
அத சம்பத — M 5 6 6 7 — சீட்டிழுப்பு இலக்கம் 781

சுப தவசக் — NLB — திகதி 2026.06.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0322 — இடபம் 14 28 40 — 3626

தன நிதானய — திகதி - 2026.06.02 — சீட்டிழுப்பு இலக்கம் - 2236 — I 39 51 59 75 I

மெகா பவர் — திகதி 02/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2554 — D 02 22 35 65 77

NLB ජය JAYA — திகதி 2026.06.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0474 — R 3 5 6 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4448 — சீட்டிழுப்பு திகதி 02.06.2026 — M 05 47 60 68

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.02 — சீட்டிழுப்பு இலக்கம் 1515 — கும்பம் 01 24 33 37 கும்பம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — සුපිරි ධන සම්පත — 02.06.2026 — வெற்றி வாரம் 0914 — M 2 3 8 2 7 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,368,298.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3180 — 25000 பணப் பரிசு 91293 — சீட்டிழுப்பு திகதி 2026.06.02 — தினம் செவ்வாய்க்கிழமை — 09 31 76 77 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.130,527,440.80 — DLB

சனிதா — திகதி 02.06.2026 — வெற்றி வாரம் 5341 — 09 12 57 74 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,059,931.60 — செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு 56195 — DLB

சசிரி — வெற்றி வாரம் 1010 — சீட்டிழுப்பு திகதி 02.06.2026 — செவ்வாய்க்கிழமை — வெற்றி இலக்கங்கள் 09 24 50 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,910,920.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4892 — சீட்டிழுப்பு திகதி 02.06.2026 — தினம் செவ்வாய்க்கிழமை — 16 18 21 39 — விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,341,820.40 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — O 20 03 48 67 72 — 2356 — 02.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.282,253,380.80 — DLB

செவ்வாய்க்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,462,732.80 — வெற்றி வாரம் 3006 — சீட்டிழுப்பு திகதி 2026.06.02 — அத கோடிபதி ADA KOTIPATHI — 23 65 75 76 D — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நெஞ்சைப்...

யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவம் அரங்கேற்றிய மனிதப் படுகொலைகளுக்கு சான்றாக விளங்கும் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 14ஆம் நாள் அகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின் குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

அகழ்வுப் பணிகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன்,

தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றனர்.

இன்றுடன் மொத்தமாக 270 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 266 மனித என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றக் காவலில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இன்றைய அகழ்வின்போது, 08 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 5 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றன் மேல் ஒன்றாக இரண்டு என்புத் தொகுதியும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

257 மற்றும் 258 ஆம் எண்களது அடையாளப்படுத்தப்பட்ட என்புத் தொகுதிகள் சிறுவர்களுடையது என கண்டறியப்பட்டது.

மேலும் ஒரு என்புக்கூட்டு குவியல் ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றைச் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஒரு என்புக்கூட்டின் கால் பகுதி சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது. அதற்கான காரணம் தெரியவில்லை. அதன் ஆய்வுகளின் பின்னரே அது தொடர்பில் கூறமுடியும்.

அதேவேளை இன்றைய தினமும் என்புக்கூட்டுடன் செப்பு துண்டொன்றும் சான்றுப்பொருளாக மீட்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை நடந்த அகழ்வின்போது நாணய வடிவிலான தாயத்து என நம்பப்படும் சான்றுப் பொருள் ஒன்றும் மீட்கப்பட்டிருந்தது.

ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் அகழ்வு நடவடிக்கைகளில் பங்குபற்றுவதனால் அகழ்வுப் பகுதி விஸ்தீரணம் செய்யப்பட்டுள்ளது என்றார். (ந-7,33)

## எரிபொருள்...

எரிபொருள் விலைகளுக்கு ஏற்ப, இறக்குமதிச் செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இதன்பிரகாரம் ஜனவரி மாதத்தில் எரிபொருள் இறக்குமதிக்காக அரசாங்கம் 186 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ள போதிலும், மே மாதத்தில் எரிபொருள் இறக்குமதிக்காக அரசாங்கத்திற்கு 521 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட நேரிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5716)
076 825 7716 (ஆகாஸ்)

Personal Classes
10ம், 11ம் வகுப்பு மாணவர்களுக்கான கணித பாட பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் A/L மாணவர்களுக்கு இரசாயனவியல் (Chemistry) வகுப்புக்களும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (7766)
தொடர்புகளுக்கு:
077 559 8670

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்க்கின்றோம்
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-5773)
V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
0777 068 777

வேலையாள் தேவை
பருத்தித்துறைப்பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரையும் வீட்டையும் தங்கியிருந்து பராமரிக்க நேர்மையான பெண் வேலையாள் தேவை. நீண்ட நாட்களுக்கு நின்று வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (2381)
தொடர்புகளுக்கு: 076 622 7803


வீட்டுப் பணிப் பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு (சகல வேலைகளும் செய்யக்கூடிய) பணிப்பெண் தேவை.
25 - 50 வயதிற்குட்பட்டோர் தேவை.
சம்பளம் 1 மாதம் : 40 000/=
3 மாதத்தில் - 60 000/= (7767)
077 196 6541

வேலையாட்கள் தேவை
திருநெல்வேலியில் இயங்கும் Super Marketக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- விற்பனைப் பிரதிநிதி
- கணனி அறிவுடையோர் (இருபாலாரும்)
- விற்பனை உதவியாளர்
(7772)
தொடர்புகளுக்கு:
077 221 0294

காணி துப்பரவு செய்ய ஆள் தேவை
பருத்தித்துறையில் சிறிய தென்னந்தோப்புடன் கூடிய காணி துப்பரவு செய்ய ஆள் தேவை.
கடின வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். நியாயமான நாள் கூலி தரப்படும். (2381)
தொடர்புகளுக்கு: 076 622 7803

Tharany SUPERMARKET
FREE PETROL
பெட்ரோல் இலவசம்
03.06.2026 முதல் 05.06.2026 வரை
10,000 ரூபாவுக்கு மேல் கொள்வனவுசெய்து, ஒவ்வொரு 10,000 ரூபாவுக்கும் 1L பெட்ரோல் இலவசமாக பெற்றிடுங்கள்
* Can Claim as Cash or Discount on Bill
VIJITHA 10 Kg Rs. 2599.00 MAX 3 BAGS / BILL
WHITE SUGAR 1Kg Rs. 219.00 MAX 3 KG / BILL
ANCHOR 400g Rs. 1200.00 Rs. 1149.00 MAX 1 PCS / BILL
GOLD WINNER SUNFLOWER OIL 1L Rs. 1099.00 Rs. 1770.00
MARVEL WET WIPES 80 PCS Rs. 545.00 Rs. 349.00
MARVEL 16 PCS Rs. 799.00
V.S.P GINGELLY OIL 750 ML Rs. 1199.00 Rs. 1300.00
MALIBAN CHOCOLATE CREAM 400g Rs. 399.00 Rs. 450.00
EVANGELINE SAKURA 100ML Rs. 1699.00 Rs. 2250.00
RUCHI SALT 400 g BUY 2 GET 1 FREE
LEAF NATURE PAPER SERVIETTES BUY 1 GET 1 FREE
ALL ELEPHANT HOUSE ICE CREAMS 11% Discount
(2382)
* இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.. விலைகள் முன்னறிவிப்பு இன்றி மாற்றப்படலாம்
NO.758, KKS ROAD, JAFFNA | NO.12, THIRUNAGAR ROAD, KILINOCHCHI
077 1997 206 | 077 744 0304


31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 05.05.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் பொன்னையா சண்முகசுந்தரம்**

(ஓய்வு பெற்ற செயலாளர் - யாழ். மாவட்ட கூட்டுறவு சபை
முன்னாள் அதிபர் - கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி)

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து பல்வேறு வகைகளிலும் அஞ்சலி செலுத்திய ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது 31 ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளைய தினம் (04.06.2026) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் சீனியர் ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல.5, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-5770)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org